Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 128 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை
(19.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 24, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

## கமெண்ட் கந்தர்...

கூட்டணி அமைக்கிறது இருக்கட்டும்.. முதலில் தேர்தல் வருமா என்று சொல்லுங்க.. பிள்ளை பிறக்க முதல் பெயர் வைக்குறாங்கள்...



## உஷ்



நாடாளுமன்ற அமர்வுகள் ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டு பெப்ரவரியில் மீண்டும் ஆரம்பிக்கப்படலாமென தகவலொன்று வெளியாகியிருக்கிறது.

புதிய வருடத்தில் தனது கொள்கை விளக்கவுரையை ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றில் நிகழ்த்தவுள்ளதால் இவ்வாறு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

# உள்ளூராட்சித் தேர்தலில் மும்முனைப் போட்டி!

## பிரதான 3 கூட்டணிகள் களமிறங்க ஏற்பாடு

**நமது நிருபர்**

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மூன்று அரசியல் கூட்டணிகள் போட்டியிடவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஒரு கூட்டணியாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் டலஸ், விமல் அணிகள் ஆகியன இணைந்து கூட்டணியாகவும், தேசிய மக்கள் சக்தி மற்றுமொரு கூட்டணியாகவும் தனித்தனியாக தேர்தல் களத்தில் இறங்கும் என்றும் கூறப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியும் கூட்டணியொன்றை அமைப்பது குறித்து பேசவுள்ளதாகத் தெரியவருகிறது. ஆயினும், அதன் உறுப்பினர்கள் கூட்டணி அமைப்பதில் ஆர்வம் காட்டவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேர்தலை சந்திப்பதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

இதேவேளை, புதிய கூட்டணியின் கீழ் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் ஏனைய கட்சிகளாலும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமல் அணியின் நிறைவேற்றுக் குழு கடந்த வாரம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் கூடியது. இதன்போது புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் டலஸ் அழகப்பெரும குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

02 பக்கம்

# அனைத்து நாடுகளுடனும் நட்புறவுக் கொள்கை அவசியம்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



''ஒரு தீவு என்ற வகையில் இலங்கை, சர்வதேச உறவுகளைப் பேணும்போது அனைத்து நாடுகளுடனும் நட்புறவுக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்'' - என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

02 பக்கம்

# வேலுகுமார் எம்.பி. மீதான இடைக்காலத் தடை வாபஸ்



தமிழ் முற்போக்கு கூட்டணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், மீண்டும் கூட்டணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

"அவர்மீதான இடைக்கால தடை மீளப் பெறப்பட்டுள்ளது" - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# 4,500 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள் தென் கடலில் மீட்பு

**த. யுவராஜ்**

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்துடன் இணைந்து தென் கடலில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 128 கிலோ 327 கிராம் ஐஸ் மற்றும் 106 கிலோ 474 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின்போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்த பெறுமதி நான்காயிரத்து 586.755 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிலிருந்து 229 கடல் மைல் தொலைவிலுள்ள..

02 பக்கம்

# ஐஸுடன் பெந்தோட்டையில் 30 பேர் கைது

**கே. சுபானி**

பெந்தோட்டை, போதிமலுவ பிரதேசத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது ஐஸ் போதைப்பொருளுடன் 30 பேர் பெந்தோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

பெந்தோட்டை, போதிமலுவ பிரதேச உல்லாச விடுதியொன்றில் பேஸ்புக் ஊடாக ஒன்றிணைக்கப்பட்ட போதைவிருந்து இடம்பெறுவதாக பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் (17) கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்படி சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02 பக்கம்

# பிணைமுறி மோசடியின் பிரதான சாட்சியாளர் தினேஷ் ஷாப்டர்!

## புதிய தகவல்கள் வெளியாகின; பொலிஸ் பல்வேறு கோணங்களில் விசாரணை

02 பக்கம்

# யாழில் கரையொதுங்கிய மியன்மார் அகதிகள் படகு

## 140 பேர் கடற்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்



**யாழ். செய்தியாளர்**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய மியன்மார் அகதிகள் படகு கடற்படையினரால் மீட்கப்பட்டு, காங்கேசன்துறை கடற்படை...

02 பக்கம்

# சுகயீனமுற்ற மாணவன் பிறிதொரு நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதி

## நுவரெலியா கல்விப் பணிமனை அதிகாரியின் சமயோசிதம்

**தலவாக்கலை நிருபர்**

கொட்டகலை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு நேற்றைய தினம் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையை கொழும்பு இசிபத்தன கல்லூரியில் எழுத அனுமதி வழங்கப்பட்டதாக நுவரெலியா வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்...

02 பக்கம்

# ரணிலின் விளையாட்டில் தமிழர்கள் சிக்கக் கூடாது

## குமார் குணரட்னம் ஆலோசனை

**யாழ். செய்தியாளர்**



2023ஆம் ஆண்டு இறுதியில் ராஜபக்ஷ, சஜித் அணி, தமிழ்த் தரப்பு ஆதரவுடன் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகிறார்.

02 பக்கம்

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆர்வத்துடன் தோற்றிய மாணவர்கள்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர். தமது பிள்ளைகளை பெற்றோர்கள்...



02 பக்கம்

# வவுனியாவில் 7 பேருக்கு டெங்கு தொற்று பீடிப்பு

## விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்

**வவுனியா செய்தியாளர்**

வவுனியாவில் 7 பேருக்கு டெங்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். நாட்டில் மீண்டும் டெங்கு...

02 பக்கம்

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

# நுவரெலியா ஸ்ரீ கதிரேசன் ஆலயம் உடைத்து திருட்டு





**செ.திவாகரன்**

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா நானு-ஓயா வீதிக்கு அருகிலுள்ள கெலேகால ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் பிரதான நுழைவாயில் உடைக்கப்பட்டு உள்ளே நுழைந்த இனந்தெரியாதவர்கள் இவ்வாலயத்தில் இருந்த பெறுமதியான தங்க நகைகள் மற்றும் உண்டியல் பணம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர்.

கடந்த (16) வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பவளவிழாவுக்கான ஆரம்ப நிகழ்வு, நேற்றைய தினம் (18) கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில், கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.**

## பிணைமுறி...

**கே. சுபானி**

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 23 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ள பொலிஸார் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பொரளை பொலிஸாரும் இணைந்து பல்வேறு கோணங்களில் தகவல்களை திரட்டி வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (18) தெரிவித்தார்.

இதேவேளை, தினேஷ் ஷாப்டர் பிணைமுறி மோசடி விவகாரத்தில் பிரதான சாட்சிகளில் ஒருவராக விளங்கினார் என தகவல்கள் வெளியாகியுள்ளதுடன், அதனையொட்டியும் விசாரணைகள் முன்னெடுக்கப்படு எகின்றன.

தினேஷ் ஷாப்டரின் படுகொலை தொடர்பில் தகவல்களை திரட்டும் பொருட்டு அவர் பயணித்த வீதியை சுற்றியுள்ள 20இற்கும் மேற்பட்ட சி.சி.டி.வி. கெமராக்களின் காட்சிகளை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் உள்ளிட்ட 04 குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

மேலும், 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் தினேஷ் ஷாப்டரிடமிருந்து 143 கோடி ரூபா பெற்றுகொண்ட சம்பவம் தொடர்பில் முதல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஆடை நிறுவனமொன்றின் தரகராக இருந்து மேற்படி தொகையைப் பெற்றுக்கொண்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இக்கொலைக்கு பணத் தகராறே காரணம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கொலைச் சம்பவம் இடம்பெற்றபோது ஷாப்டர் பயணித்த காரிலிருந்து சந்தேகத்துக்கிடமான 14 கைரேகைகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதேவேளை, இந்த மர்மக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொலைச் சம்பவம் இடம்பெற்ற பொரளை பொது மயானம் மற்றும் அதனை அண்டிய பகுதியில் சி.சி.டி.வி. கெமராக்கள் பொருத்தப்படாமை விசாரணைகளுக்கு பெரும் பாதிப்பாகவுள்ளதாகத் பொலிஸார் தெரிவித்தனர். இந்த பகுதியில் சி.சி.டி.வி. பொருத்தப்படாததை அவதானித்தே அந்தப் பகுதியில் கொலையாளிகள் இந்த கொலையை செய்திருக்கலாம் என்றும் ஷாப்டரை கொலை செய்யும் முயற்சியில் இரண்டு அல்லது மூன்று பேர் ஈடுபட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் ஷாப்டரின் கைத்தொலைபேசிக்கு வந்த சந்தேகத்திற்கிடமான பல அழைப்புகள் மூலம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், கொலை செய்யப்பட்ட வர்த்தகர் ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசியில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் தொலைபேசி நிறுவனங்களின் உதவியுடன் தனித்தனியாக விசாரணைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளரான பிரையன் தோமஸிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பிரையன் தோமஸின் கையடக்க தொலை பேசியையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர். அவரின் வெளிநாட்டு பயணங்களை இரத்து செய்து, கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணுவல நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தார்.

இந்தக் கொலை தொடர்பிலான விசாரணைகள் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய குற்றப்புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் திட்டமிட்ட குற்றம் மற்றும் மனிதக்கொலை தொடர்பான விசாரணை பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனினும், கொலை சம்பவம் தொடர்பில் நேற்று மாலைவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதேவேளை, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பில் முக்கிய சாட்சியாக இருந்து பல்வேறு தகவல்களை தினேஷ் ஷாப்டர் அம்பலப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அவர் பல்வேறு தகவல்களை வழங்கியுள்ளார். அந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் 223ஆம் பக்கத்தில், பிணைமுறி கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஷாப்டரின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பிணைமுறி ஏலத்தின்போது இரு அசாதாரண விடயங்கள் இடம்பெற்றதாக தினேஷ் ஷாப்டர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர், கடும் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் கொழும்பின் வர்த்தக சமூகத்தில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளர் சந்திரா ஷாப்டரின் புதல்வரான தினேஷ் ஷாப்டர், ஜனசக்தி காப்புறுதி நிறுவனத் தலைவராவார்.

பொரளை கனத்தை மயானத்தில் வாகனம் ஒன்றில் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கைகள் கட்டப்பட்ட நிலையில் வியாழனன்று மாலை அவர் மீட்கப்பட்டார்.

அவரைக் கண்டுபிடித்த சக ஊழியர், ஷாப்டரை கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்த்தார். எனினும், 51 வயதான தினேஷ் ஷாப்டர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் வியாழன் இரவு 11.30 மணியளவில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தினேஷ் ஷாப்டரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நேற்று (18) மாலை இடம்பெற்றன.

## வேலுகுமார்...

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் உயர்பீடம் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கூடியபோது, இவ்விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு, சிவில் சமூகத்தினரின் கோரிக்கை பரிசிலிக்கப்பட்டு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இம்முடிவுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டிக்கிளை எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. நடுநிலை என்பது அரசுக்கான ஆதரவு அல்ல என்பதால் வேலுகுமார் மீதான தடைநீக்கப்பட வேண்டும் எனவும் தலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அத்துடன், சிவில் சமூக பிரதிநிதிகள் சிலரும் இவ்விவகாரம் தொடர்பில் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கினர். இந்நிலையிலேயே வேலுகுமார் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

## 4,500 மில்லியன்...

கடற்பரப்பில் கடந்த 14ஆம் திகதியன்று, 02 உள்ளூர் மீன்பிடி இழுவை படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே குறித்த போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது குறித்த இழுவைப் படகுகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது, 94 பொதிகளில் 124 கிலோ, 327 கிராம் ஐஸ் மற்றும் 98 பொதிகளில் 106 கிலோ 474 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் 13 சாக்குகளில் மீட்கப்பட்டுள்ளதுடன், 14 சந்தேக நபர்களுடன் டிசம்பர் 14ஆம் திகதி கைப்பற்றப்பட்டது.

இதன்போது போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று (18) காலை கடற்படையினரால் கொழும்பு துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தங்காலை, நகுலுகமுவ, கொஸ்கொட மற்றும் பலபிட்டிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும், அவர்கள் 29 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## புலமைப்பரிசில்...

பரீட்சை நிலையத்திற்கு உற்சாகமளித்து அனுப்பி வைத்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் நிலையில் நாடளாவிய ரீதியில் 3 இலட்சத்து 34 ஆயிரத்து 698 பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது. இந்தப் பரீட்சைக்காக 2 ஆயிரத்து 894 பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## அனைத்து...

உலக வல்லரசுகளின் போராட்டங்களில் இலங்கை பக்கச்சார்பின்றி அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்படுவதன் மூலம் சர்வதேச உலகில் இலங்கையை நல்ல நிலைக்கு உயர்த்த முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தியத்தலாவ இராணுவ கல்வியியல் கல்லூரியின் 97ஆவது பயிற்சியை முடித்து வெளியேறும் கெடட் உத்தியோகத்தர்களின் பிரியாவிடை மரியாதை அணிவகுப்பில் நேற்று முன்தினம் (17) உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தியத்தலாவ இராணுவ கல்வியியல் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்த 351 கெடட் உத்தியோகத்தர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்த நான்கு கெடட் உத்தியோகத்தர்களும் இங்கு பயிற்சி பெற்று அதிகாரிகளாக நியமிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இராணுவ கல்வியியல் கல்லூரிக்கு விஜயம் செய்த முப்படைகளின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் கௌரவத்துடன் வரவேற்கப்பட்டார்.

முதலில் அவ்வளாகத்தில் உள்ள இராணுவ வீரர் நினைவிடத்திற்குச் சென்ற ஜனாதிபதி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

கெடட் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பை பார்வையிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிறந்த கெடட் அணிக்கு சம்பியன் கொடியை வழங்கியதுடன், கெடட் வீரர்களிடம் வாள்களையும் கையளித்தார்.

அதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர்களுடன் குழு புகைப்படத்தில் தோன்றிய ஜனாதிபதி, தனது விஜயத்தைக் குறிக்கும் வகையில் கல்லூரி மைதானத்தில் மரக்கன்று ஒன்றையும் நட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

இன்றைய நாள் உங்களுக்கு மிக முக்கியமானது. இன்று நீங்கள் தியத்தலாவ இராணுவ கல்வியியல் கல்லூரியில் பயிற்சியை முடித்துள்ளீர்கள். ஆனால், இது உங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய தொடக்கமாகும். இன்று முதல் நீங்கள் அனைவரும் இராணுவத்தின் நிரந்தர உறுப்பினர்களாக பணியாற்றத் தொடங்குவீர்கள்.

இலங்கை இராணுவத்தின் தலைவர்கள் என்ற வகையில் உங்களுக்கும் இன்று முதல் பொறுப்புள்ளது. அதன்படி, இராணுவத்தையும் அதன் வீரர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்குள்ளது. மக்களின் அரசாங்கம் என்ற வகையில் உங்களுக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு பயிற்சியளிக்கும் நிறுவனத்தின் மரியாதையையும் அதன் நற்பெயரையும் எப்போதும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

ஒரு நாடு என்ற அடிப்படையில் நாம் உலக வல்லரசுகளிடமிருந்து ஒரு தரப்பாகப் பிரிந்து நிற்கவில்லை. உலக வல்லரசுகளுடன் நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. ஏனென்றால், நாம் ஒரு தீவு நாடு. அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும்.

இந்நாட்டைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. உள்ளக மற்றும் வெளிப்புறத் தாக்கங்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் திறன் உங்களிடம் உள்ளது. உங்களை உள்ளடக்கிய எங்கள் இராணுவத்துக்கு இராணுவ அனுபவம் உள்ளது. மேலும், அவர்களுக்கு சர்வதேச போர் அனுபவம் உள்ளது. ஐ.நா. படைகளுடன் இணைந்து மாலி அரசின் நடவடிக்கைகளில் நமது பாதுகாப்புப் படைகளும் பங்குகொள்கின்றன.

அதனால் சவால்களை சமாளிக்க முடியும். எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும் திறன் உங்களுக்கு உள்ளது. எனவே, அந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்து, நீங்கள் அனைவரும் வலுவாக முன்னேறுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலைத் தலைமை அதிகாரி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லுத்தினன் ஜெனரல் விக்கும் லியனகே, தியத்தலாவ இராணுவ கல்வியியல் கல்லூரியின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் நியங்கொட உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஐஸுடன்...

இந்த சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்களிடமிருந்து ஆயிரத்து 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கைதானவர்கள் 30 பேரும் 21 - 37 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அவர்கள் மோதரை, மட்டக்குளிய, வத்தளை, நாரஹேன்பிட்டிய, மாளிகாவத்தை, வலஸ்முல்லை மற்றும் கொழும்பு -12 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேநபர்கள் நேற்று (18) பலப்பிட்டிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

## உள்ளூராட்சி...

அதுவரை, கட்சி வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதைத் தொடர முடிவு செய்துள்ளதாக விமல் அணியின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை, கலாநிதி நாலக்க கொடஹேவா, வியத் பெரமுன என்ற புதிய அரசியல் கட்சியையும் பதிவு செய்துள்ளதாகவும், அதன் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணிகளும் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, தேர்தலுக்காக புதிய அரசியல் கூட்டமைப்பைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் அடுத்த வாரம் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது. அப்படியானால் பெப்ரவரி மாதம் தேர்தல் நடைபெறும் என்பது தெரிந்ததே. உள்ளூராட்சி சட்டத்தின் பிரகாரம் மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவப்படவேண்டும்.

## சுகயீனமுற்ற...

எஸ்.செல்வராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய தினம் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருந்த கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய மாணவர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் கொழும்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த மாணவன் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற இருந்தமையால் அம்மாணவன் நேற்று மாத்திரம் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு பரீட்சை எழுதிய பின்னர் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் பணித்திருந்தது. ஆனால், அந்த மாணவனுக்கு கொழும்பிலிருந்து மீண்டும் கொட்டகலைக்கு பயணம் செய்து பரீட்சை எழுதுவதற்கான சூழ்நிலை இருக்கவில்லை.

இதனையடுத்து வகுப்பாசிரியர் மற்றும் மாணவனின் பெற்றோர் நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் செல்வராஜாவின் கவனத்திற்கு கொண்டுவந்தமைக்கு இணங்க அவர் பரீட்சைத் திணைக்கள பரீட்சை அதிகாரி ஜீவராணி புனிதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தேவையான சகல ஆவணங்களையும் மின்னஞ்சல் ஊடாக அவருக்கு அனுப்பி வைத்தார். இதற்கமைவாக குறித்த மாணவன் தற்காலிகமாக வசிக்கும் தமது உறவினர் வீட்டுக்கு அருகாமையிலுள்ள கொழும்பு இசிப்பத்தன வித்தியாலயத்தில் நேற்றைய தினம் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

## யாழில்...

தளத்துக் கொண்டுசெல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் படகில் சுமார் 140 அகதிகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடமராட்சி கிழக்கில் உடுத்துறைக்கும், சுண்டிக்குளத்திற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் நேற்று மாலை அகதிகள் படகொன்று அவதானிக்கப்பட்டது. கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் அந்தப் படகை அவதானித்தனர். தாம் மாலைதீவை சேர்ந்தவர்கள் என்றும், தொடர்ந்து படகுப் பயணத்தை தொடர உதவிபுரியுமாறும் கேட்டுக் கொண்டனர். மீனவர்கள் இது தொடர்பில் கடற்படையினருக்கும், கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினருக்கும் அறிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய மியன்மார் அகதிகள் படகு கடற்படையினரால் மீட்கப்பட்டு, காங்கேசன்துறை கடற்படை தளம் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

வடமராட்சி கிழக்கில் உடுத்துறைக்கும், சுண்டிக்குளத்திற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் நேற்று மாலை அகதிகள் படகொன்று அவதானிக்கப்பட்டது. கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் அந்த படகை அவதானித்தனர்.

தாம் மாலைதீவை சேர்ந்தவர்கள் என்றும், தொடர்ந்து படகு பயணத்தை தொடர உதவிபுரியுமாறும் கேட்டுக் கொண்டனர்.

மீனவர்கள் இது தொடர்பில் கடற்படையினருக்கும், கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினருக்கும் அறிவித்தனர்.

அங்கு கடற்படையினர், உள்ளூர் மீனவர்கள் சென்றனர். இதன் பின்னர், படகில் இருந்தவர்கள் மியன்மாரின் ரோஹிங்கியா முஸ்லிம் மக்கள் என்பது தெரிய வந்தது. மியன்மாரில் மிகப்பெரிய இன அழிப்பிற்குள்ளாகும் ரோஹிங்கியாக்கள் சமகால உலகின் மிக துன்பப்படும் இனங்களிலொன்றாகும்.

படகிலிருந்தவர்கள் முரணான தகவல்களை தொடர்ந்து வழங்கினர். அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டதாகவும், மலேசியா செல்ல முற்பட்டதாகவும் பல்வேறு தகவல்களை வழங்கினர். சிலர் தாம் இலங்கைக்கு வந்ததாகவும் குறிப்பிட்டனர்.

அந்தப் படகில் சுமார் 140 பேர் இருப்பதாக கருதப்படுகிறது. மிக மோசமாக பழுதடைந்த படகில் உயிரை பணயம் வைத்து இந்த பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

அவர்கள் எந்த நாட்டிற்கு புறப்பட்டார்கள் என்பது உறுதியாகாத நிலையில், அவர்களை கரைக்கு அழைத்துச் செல்லும் பணி முன்னெடுக்கப்பட்டது. நேற்று இருள் சூழ்ந்து விட்டதாலும், மோசமான கடல் நிலைமை காரணமாகவும் மீட்புப்பணி தாமதிக்கப்பட்டது.

## வவுனியாவில்...

தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், வவுனியா மாவட்டத்திலும் 7 பேர் டெங்கு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதில், வவுனியா கந்தசாமி கோவில் வீதி மற்றும் நகர உள்வட்ட வீதி என்பவற்றில் வசிக்கும் இருவருக்கு டெங்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு குறித்த பகுதியிலேயே தொற்று ஏற்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தவிர, உக்குளாங்குளம் பகுதியில் இருவருக்கும், நொச்சிமோட்டை பகுதியில் ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியில் ஒருவருக்கும், மறவன்குளம் பகுதியில் ஒருவருக்கும் என மேலும் 5 பேருக்கு தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு டெங்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தற்போது அவ்வப்போது மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து டெங்கு தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே, அனைவரும் சமூகப் பொறுப்புடன் தமது வாழ்விடங்களையும், அயல் பகுதியையும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெற முடியும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

## ரணிலின்...

அதற்கான முன்னேற்பாடே தமிழ் மக்கள் பிரச்சினையை தீர்க்கப்போவதாக அவர் கூறுகிறாரென தெரிவித்த முன்னிலை சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரட்னம் தமிழ்த் தரப்புகள் இதனை விளங்கி கொள்ளவேண்டும். ரணிலின் விளையாட்டில் சிக்கிவிடக் கூடாது என்றார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (17) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2015 நல்லாட்சி எனக் கூறிய காலத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகளை அவசரமாக தீர்ப்பது போன்ற தோற்றம் காட்டப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்துவோமென தமிழ் தரப்புகள் நம்பகூடாது. போராட்டத்தை நம்பவேண்டும். ரணிலின் விளையாட்டில் சிக்கிவிடக் கூடாது.

இனவாதத்திற்கு எதிரான தன்மையை காலி முகத்திடல் போராட்டத்தில் கண்டோம். ஆனால், தற்போது இன ஒற்றுமையை பிரிக்க முயற்சிக்கின்றனர். போராட்டத்திற்கு இடமளிக்கமாட்டேன் என ராஜபக்ஷவினருக்கு ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்துள்ளார்.

இராணுவம், பொலிஸ் புலனாய்வுத்துறை என்பன போராட்டத்தை அடக்க முனைப்பு காட்டுகின்றன. பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி போராட்டத்தை அடக்க முயல்கின்றனர். அது தொடர்பாக யாழ்ப்பாண மக்களுக்கு அனுபவமுண்டு. சிங்கள மக்களுக்கு அது புதிதானதே. போராட்ட சக்திகளை பிரிக்க பல்வேறுபட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நடுத்தர வர்க்கத்தை இலக்கு வைத்து தனியார் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சிக்கிறார். வரவு-செலவுத் திட்டம் மூலம் ஒரு இலட்சம் ரூபா வருமானம் பெறுபவரும் வரிசெலுத்தும் நிலை உள்ளது.

அரசியலமைப்பு மற்றும் நாடாளுமன்றம் மூலம் செய்ய முடியாததை போராட்டம் மூலம் செய்யமுடிந்தது. அதிக நேர மின்வெட்டு, வரி அறவீடு போன்றவற்றால் 2023ஆம் ஆண்டு போராட்டம் மேலும் வலுப்படும். நடுத்தர - சாதாரண மக்கள் பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் கிளர்ந்தெழுவர்.

தேர்தலொன்று நடந்தால் அதனுடன் இணைந்ததாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு புதிய அரசியலமைப்பு கொண்டுவர வேண்டும். நாடாளுமன்ற முறைமை இருக்கட்டும். மக்கள் அதிகாரம் கொண்ட மக்கள் சபை உருவாக்கப்பட வேண்டும். நாம் கடந்த ஜூலை 9 போராட்டத்தில் இதனையே கண்டோம். பிரதேசவாரியாக இவை உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

# இராணுவம் கைதுசெய்த மகனைத் தேடி போராடிய தாய் உயிரிழப்பு



கடந்த 1996ஆம் ஆண்டு புத்தூர் கிழக்கு, ஊரணி பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மகனைத்தேடி போராட்டம் செய்த தாயார் ஒருவர் சனிக்கிழமை (17) உயிரிழந்துள்ளார்.

புத்தூர் கிழக்கு, ஊரணி பகுதியைச் சேர்ந்த செல்வன் சோதி என்ற தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது மகன் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர், தனது மகனை மீண்டும் தன்னிடம் மீட்டுத்தருமாறு கோரி பல போராட்டங்களில் இவர் ஈடுபட்டு வந்துள்ளார். இருப்பினும், அவருக்கு இறுதிவரை அவரது மகனை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

தமது பிள்ளைகளைத் தேடி போராட்டங்களில் ஈடுபட்ட பல பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் உயிரிழந்த நிலையில், அவர்களது பிள்ளைகளை காண்பது என்பது அவர்களுக்கு கடைசிவரை கனவாகவே அமைந்துள்ளமை மக்கள் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

# கட்டணம் செலுத்த தவறிய பாவனையாளரது நீர் விநியோகத்தை துண்டிக்க தீர்மானம்

கட்டணம் செலுத்தத் தவறிய பாவனையாளர்களுக்கான நீர் விநியோகம் அடுத்த மாதம் முதல் துண்டிக்கப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

40 வீதமானோர் கட்டணம் செலுத்த தவறியுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவி பொதுமுகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க குறிப்பிட்டார். 8,000 மில்லியன் ரூபா வரை காணப்பட்ட நிலுவை தொகை, 4000 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டது. எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக மீண்டும் 6,000 மில்லியன் ரூபா கட்டணம் நிலுவையில் உள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவி பொதுமுகாமையாளர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், 60 நாட்களுக்கு மேல் கட்டணம் செலுத்தத் தவறிய அனைத்து பாவனையாளர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. சுமார் 8 இலட்சம் பாவனையாளர்கள் 3 மாதங்கள் அல்லது அதற்கும் அதிக நாட்கள், நீர்க் கட்டணம் செலுத்த தவறியுள்ளதாக ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்தார்.

# இந்தியா தலைமையில் சர்வதேச மத்தியஸ்தம் - பிராந்திய சுயாட்சி

## போராளிகள் கட்சியின் மாநாட்டில் பரிந்துரைப்பு





தமிழ் மக்களின் அரசியல் தீர்வை வென்றெடுக்க 13 ஆம் திருத்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்து பிராந்தியங்களின் சுயாட்சி, அதற்கு மேலான முறை ஒன்றை ஸ்தாபித்தல் மற்றும் பிராந்திய வல்லரசான இந்தியா தலைமையிலான சர்வதேச மத்தியஸ்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் கொள்கை விளக்க அறிக்கை வெளியிடப்பட்டது.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஜனநாயக போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் கட்சியின் தலைவர் சிவநாதன் நவீந்திரா (வேந்தன்) கொள்கை விளக்க அறிக்கையை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழப்போர் ஓய்வடைந்த பின்னர் சுமார் 13 வருடங்கள் கடந்த நிலையில் பல்வேறு சவால்களை நாம் எதிர்கொண்டு வருகின்றோம்.

நாம் இந்த மண்ணில் எமக்குரிய வரலாற்று மாண்புகளுடனும் சுய நிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டுமெனில் எமக்கென்று ஒரு சுதந்திர தேசத்தை உருவாக்க வேண்டும் எனப்பல தசாப்தங்களாக போராடி இருக்கிறோம்.

ஜனநாயக ஏதுநிலைகள் தகர்ந்து போன சூழ்நிலையில் கட்டமைக்கப்பட்ட ஓர் இன அழிப்பு முறையை எதிர்கொள்வதற்காக ஏந்தப்பட்ட ஆயுதங்கள் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக வியாபித்திருந்தது.

தாயக விடுதலைக்கான பல அர்ப்பணிப்புகள் கேள்விக்குறியாக்கப்பட்ட நிலையில், திம்பு கோட்பாட்டில் இருந்து ஜெனிவா வரையிலான அரசியல் தீர்வு பற்றி பல முனைப்புகளிலும் ஈடுபட்டுள்ளோம்.

சிங்கள பௌத்தம் என்ற அரசியல் கோட்பாடும் அதனை நிலைநிறுத்துவதற்காக தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியுமே தற்போதுவரை பிரச்சினைக்கு மூலவேர் என்பதை சிங்கள தேசம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்நிலையில், எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்காக பின்வரும் முன்மொழிவுகளை கொள்கை நீதியாக பரிந்துரைக்கிறோம்.

தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்துவதுடன், தமிழ் தேசியக் கட்சிகள், சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள், போராளிகள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் வகிபாகம் இருக்க வேண்டும்.

ஈழத் தமிழருக்கான அரசியல் தேர்வு முன்மொழிவை தமிழர் தரப்பின் ஏகோபித்த வரைவாக இலங்கை அரசுக்கும் ஏனைய வகிபாகங்களுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

எந்த ஒரு பேச்சுவார்த்தையின் போதும் பிராந்திய வல்லரசான இந்தியாவின் தலைமைத்துவத்துடனான சர்வதேச மத்தியஸ்தம் மற்றும் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாக வைத்து பிராந்தியங்களின் சுயாட்சி அதற்கு மேலான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டும். அத்துடன் ஈழத் தமிழருக்கான தீர்வு முயற்சிகள் சம்பந்தமான எந்த ஒரு பேச்சுவார்த்தை முனைப்பும் ஒரு கால வரையறையையும் சட்டத்தை அடிப்படையாகவும் வைத்தே நடத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழக-யாழ். கப்பல்சேவை பெப்ரவரியில் ஆரம்பமாகும்

## யாழ். வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம்



காரைக்கால் - காங்கேசன்துறை கப்பல் சேவை அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்குமென யாழ். வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார். யாழ். வணிகர் கழகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தைப்பொங்கலின் பின்னர் பெப்ரவரி ஆரம்பத்திற்குள் காரைக்கால் காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கிறோம். இரு நிறுவனங்கள் இதை ஆரம்பிக்கின்றன. எம்முடனும் கலந்துரையாடல் நடத்துகிறார்கள். இது வர்த்தக கப்பல் சேவை.

சிறிய கப்பல்கள்தான் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படும். அவை 1000 மெட்ரிக் தொன்னிற்கும் குறைவாக கொள்ளளவுடையவை என்றார்.



கந்தப்பளையில் இயங்கும் 'நிவ் டைனிங் டொட்ஸ்' ஆரம்ப பாடசாலையில் பயிலும் சிறார்களுக்கான வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நேற்று (18) காலை சர்மிளா வரவேற்பு மண்டபத்தில் அதிபர் திரேஸா நெட்டோ தலைமையில் இடம்பெற்றது. கந்தப்பளை, இராகலை, ஹைபொரஸ்ட் பிரதேச ஆரம்ப பாடசாலைகளின் சிறார்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் அதிதிகளாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் மதகுருமாரும் கலந்துகொண்டு சிறார்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (ஆ.ரமேஸ்)

# இலங்கை இராஜதந்திரிகள் யாழ். ஆயருடன் சந்திப்பு



(யாழ்.நிருபர்)

யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டுக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட தூதுவர் குழு சந்தித்து கலந்துரையாடியது.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

பிரான்ஸ், பஹ்ரைன், வியட்நாம், ஜேர்மனி, லெபனான், இஸ்ரேல், எத்தியோப்பியா, பிலிப்பைன்ஸ், ஜோர்தான், அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேஷியா ஆகிய 12 நாடுகளுக்கு புதிதாக இலங்கையால் நியமிக்கப்பட்ட தூதுவர் குழுவே இந்த சந்திப்பில் ஈடுபட்டது. இதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர். வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்த தூதுவர் குழு பல்வேறுபட்ட சந்திப்புகளில் ஈடுபட்டு வருகிறது.

# ஐயப்ப சுவாமி ஜோதி பூஜை நிகழ்வு கொட்டகலை சீ.எல்.எப். வளாகத்தில்





(எஸ்.கணேசன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஐயப்ப சுவாமியின் ஜோதி பூஜை நிகழ்வு கடந்த சனிக்கிழமை (17) இரவு கொட்டகலை சீ.எல்.எப். வளாகத்தில் நடைபெற்றது.

மார்கழி மாதம் 02ஆம் நாள் (17) மாலை இந்த பூஜை நிகழ்வுகள் ஆரம்பமாகி, இரவு வரை இடம்பெற்றது. அத்தோடு, படிப்பூஜையும் இடம்பெற்றது.

இந்த பூஜை வழிபாட்டிற்கு இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள ஐயப்ப சுவாமிக்கு மாலை அணிந்த அனைத்து குரு சுவாமிகள் உட்பட சுவாமிமாரும் கலந்துகொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

மேலும், நிகழ்வை சிறப்பிக்க தென்னிந்தியாவின் பிரபல பக்தி பாடகர் அபிஷேக் வீரமணி ராஜுவின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வியட்நாமில் தற்கொலை செய்த அகதியின் பூதவுடல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது



வியட்நாமில் தற்கொலை செய்துகொண்ட, சாவகச்சேரியை சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரனின் சடலம் கடந்த சனிக்கிழமை (17) விமானம் மூலமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

அண்மையில், கப்பல் மூலமாக கனடா செல்ல முற்பட்டிருந்த நிலையில், வியட்நாம் கடற்பரப்பில் 300க்கும் மேற்பட்ட இலங்கையர்களுடன் சென்ற மீன்பிடிக் கப்பல் சேதமடைந்து, தத்தளித்துக் கொண்டிருந்துள்ளது.

அதனையடுத்து அவர்களை ஜப்பானிய கப்பல் அதிகாரிகள் மீட்டு வியட்நாமில் கரை சேர்த்தனர். அங்கு முகாமில் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை வியட்நாம் அதிகாரிகள் மேற்கொண்ட நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு இலங்கையர்கள் தமது உயிரை மாய்க்க முயற்சித்திருந்தனர்.

அதனையடுத்து உடனடியாக அவர்கள் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கையில் உள்ள உறவினர்கள் கோரிக்கை விடுத்ததையடுத்து, நீண்ட நாட்களின் பின்னர் சடலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



அகில இலங்கை சபரிமலை குரு சுவாமிகள் ஒன்றியத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் குருசாமி தலைமையில் அவரது இல்லத்தில் சக்தி பூஜையும் 18 படி செல்லும் சுவாமிகள் மற்றும் சமூக சேவையாளர்களின் கௌரவிப்பும் கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.

தொலைநகல் : 0112 67 34 42.

தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87

விளம்பரம் : 077 172 1880

மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, டிசம்பர் 19ஆம் திகதி, திங்கட்கிழமை


## இலங்கைக்கு உதவுமா சீனா?

இதுவரை இல்லாத மோசமான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கு கடந்த செப்டெம்பர் 1ஆம் திகதி இலங்கை தகுதி பெற்றது.

இந்த பிணை எடுப்பை அணுகுவதற்காக, கடன் வழங்குபவர்களிடமிருந்து இந்த மாதத்திற்குள் கடன் நிலைத்தன்மைக்கான நிதியளிப்பு உத்தரவாதங்களை வழங்கும் என கொழும்பு நம்புகிறது.

இது இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் குழுவானது ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு ஒரு 'முன் நடவடிக்கை', முன்னேற்பாடாகும்.

வருட இறுதி விடுமுறைக் காலம் நெருங்கியுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவில், அதாவது பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் இந்த அர்ப்பணிப்புகளை முடிக்க தனது அரசாங்கம் செயற்படும் என்று கூறியுள்ளார்.

இலங்கையின் உத்தியோகபூர்வ கடனாளிகளிடமிருந்து கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான நிதி உத்தரவாதங்கள் மற்றும் தனியார் கடனாளிகளுடன் கூட்டு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு நல்ல நம்பிக்கையுடன் முயற்சிகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமானது.

சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகியவை இலங்கையின் முக்கிய இருதரப்புக் கடன் வழங்குநர்கள் ஆவர். மொத்த இரு தரப்புக் கடனில், அதாவது இலங்கை வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையில், சீனாவின் பங்கு 52 சதவீதம், ஜப்பானின் பங்கு 19.5 சதவீதம் மற்றும் இந்தியாவின் பங்கு 12 சதவீதமாகும்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் எவ்வாறு முன்னேறி தீர்க்கப்படுகின்றன என்பதற்கு சீனாவும் குறைந்த அளவில் இந்தியாவும் என்ன செய்கின்றன என்பது முக்கியமானது. எந்தவொரு இருதரப்புக் கடனாளியும் எந்தவொரு நாடும் அல்லது குழுவும் முன்னுரிமையைப் பெற விரும்பவில்லை. மேலும், கடனாளிகள் ஒரு பொதுவான தளத்தில் இருந்து கடனாளி நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார்கள்.

ஜப்பான், தென் கொரியாவை உள்ளடக்கிய OECD குழுமத்தின் கடன் வழங்குபவர்கள் பரிஸ் குழுமம் எனப்படும் பொதுவான தளத்தின் மூலம் பணிபுரிகின்றனர். இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு, சீனாவும் இந்தியாவும் வரவேண்டும் என்று பரிஸ் குழுமம் விரும்புகிறது.

சீனாவின் முக்கிய கவலை என்னவெனில் இலங்கையின் இருதரப்புக் கடனில் மிகப்பெரிய பங்கை அது கொண்டுள்ளதுதான். மேலும் அதன் கடந்தகாலப் பதிவு, இரகசியமான விதிமுறைகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை விரும்புவதாக தெரிவிக்கிறது. இலங்கையுடன் பரிஸ் கிளப் பேச்சுவார்த்தையில் இணையப்போவதாக சீனா கூறவில்லை.

எந்தவொரு ஒப்பந்தமும் "கடன்தாரர்களின் சமத்துவத்தையும் வெளிப்படைத்தன்மையையும்" பிரதிபலிக்க வேண்டும் என்று கூறியுள்ள இந்தியா, சீனாவைக் கொண்டிருக்காத ஒரு பொதுவான தளத்தில் சேர்வது பற்றி கவலை கொண்டுள்ளது. மறுபுறம், இந்த ஆண்டு இந்தியாவிடமிருந்து 4 பில்லியன் டொலர் அவசர உதவியை மறுசீரமைப்பில் சேர்க்க வேண்டும் என்று இலங்கை தரப்பு தெரிவித்துள்ளமை இங்கு நோக்கப்படவேண்டியது.

தற்போது இந்திய மத்திய அரசு கொழும்புடன் தனித்தனியான இரு தரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. இந்த மாத தொடக்கத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடனான பேச்சுகள் "வெற்றி பெற்றன" என்றார். இலங்கையுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுகளில் நுழைவதில் சீனாவின் வெளிப்படையான தயக்கம் இரு தரப்பு ரீதியாகவும் பெய்ஜிங்கை பொது கண்டனத்திற்கு வழிவகுத்தது.

நாடாளுமன்றத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சானக்கியன் இராசமாணிக்கம், இலங்கையின் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை சீர்குலைக்க சீனா முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டினார்.

மேலும், ''சீனா உண்மையிலேயே இலங்கையின் நண்பன் என்றால், (கடன்) மறுசீரமைப்பு மற்றும் ஐ.எம்.எவ். திட்டத்திற்கு உதவுமாறு சீனர்களிடம் கேளுங்கள்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, சீனாவுக்கான இலங்கையின் கடன், நாட்டின் மொத்த வெளிநாட்டுக் கடனில் 10 சதவீதமாக கணக்கிடப்பட்டது. இது ஜப்பானுக்கு சமமானதாகும். இருப்பினும், ஜோன்ஸ் ஹோப்கின்ஸ் யுனிவர்சிட்டி ஸ்கூல் ஒவ் அட்வான்ஸ்ட் இன்டர்நேஷனல் நடத்திய ஆய்வில் இது 20 சதவிகிதம் அதிகமாக உள்ளது என்பதைக் காட்டுகிறது.

இலங்கையின் சீனக் கடன்கள் 2021ஆம் ஆண்டின் இறுதியில் $ 7.4 பில்லியன் என்று கூறப்படுகிறது.

கிட்டத்தட்ட இவை அனைத்தும் சீன அரசாங்கத்திற்கு அப்பால், அரசுக்கு சொந்தமான வங்கிகளான சீன எக்ஸிம் வங்கி மற்றும் சீன டெவலப்மென்ட் வங்கி (முறையே $ 4.3 பில்லியன் மற்றும் $ 3 பில்லியன்) வழங்கியவையாகும். மேலும், இது இலங்கையின் கடனில் 19.6 வீதமாகும். இந்தக் கடன் குறித்து உலக வங்கியின் சர்வதேச கடன் புள்ளியியல் துறைக்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் சீனா ஒரு முக்கிய பங்கை வகிக்க வேண்டும்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கான சீனாவின் அணுகுமுறை மற்றும் வழங்கப்படும் கடன் நிவாரணத்தின் அளவு ஆகியவை மற்ற நாடுகளிலும் விட சீனாவின் பங்கு மற்றும் நடத்தைக்கு ஒரு முன்மாதிரியாக அமையும்.

சீனாவிடமிருந்து அதிக கடன் வாங்கும் நாடான ஸாம்பியா, சீனாவுடனான முட்டுக்கட்டையான விவாதங்கள் காரணமாக இரண்டு ஆண்டுகளாக அதன் கடன் மறுசீரமைப்புடன் போராடியது. நிபுணர்களின் கூற்றுப்படி, பொருளாதார முட்டுக்கட்டையைக் குறைப்பதற்கான ஒரு வழி, இலங்கை 'மிகவும் விருப்பமான கடனாளிகள்' விதியை நாடுவதாகும்.

இலங்கை கடன் மறுசீரமைப்பில் சீனா காட்டும் கரிசனையின்மையானது இலங்கையை இப்படியே வைத்துக்கொண்டு தனது ஆதிக்கத்தை இங்கே நிலைநாட்ட கடன் விவகாரத்தை முன்வைத்து செயற்படும் எண்ணத்தை கொண்டுள்ளதோ என்ற தோற்றப்பாட்டையே தருகிறது. இலங்கை விடயத்தில் சீனா பொருளாதார நோக்கங்களுக்கு அப்பால் செயற்பட வேண்டும்.

# யாங்ட்ஸி சொல்லும் செய்தி!



இந்தியாவில் இதுவரை வடமேற்கு எல்லையில் மட்டும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த சீனா, இப்போது கிழக்கு எல்லையிலும் அத்துமீற முற்பட்டிருக்கிறது. அருணாசலப் பிரதேசத்தில் உள்ள யாங்ட்ஸி பகுதியில் சீனப் படைகள் அத்துமீற முற்பட்டதாகவும், இந்திய இராணுவம் அதனை முறியடித்ததாகவும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். இராணுவமும் அதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்திய - சீன கிழக்கு எல்லையிலுள்ள தவாங் செக்டாரில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை, ஏறத்தாழ வடமேற்கு எல்லையான லடாக்கில் ஏற்பட்டிருப்பது போலவே அமைந்திருக்கிறது. லடாக்கில் ஏப்ரல் 2020இல் நடந்த சீனாவின் அத்துமீறல் முயற்சியின் பாதிப்புகளுக்கு இதுவரை முழுமையாக தீர்வு காணப்படவில்லை. தற்காலிகமாக, இருதரப்பும் ஒப்புக்கொண்ட கண்காணிப்புப் பகுதிகளில் இந்தியத் துருப்புகள் தங்களது பாதுகாப்பு ரோந்தை தொடங்காமல் இருக்கின்றன.

டெப்ஸாங், டெம்ஸோக் பகுதிகளில் இன்னும்கூட சீன ராணுவம் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் இந்திய பகுதிக்குள்ளிருந்து பின்வாங்கவில்லை. இதன்மூலம் தன்னிச்சையாக எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை பிரச்சினைக்குரிய பகுதிகளில் சீனா மாற்றியமைக்க முயற்சிக்கிறது.

சீனாவின் அத்துமீறல்கள் புதிதொன்றுமல்ல. 1962 இந்திய - சீனப் போருக்குப் பிறகு அவை தொடர்கதையாக மாறியிருக்கின்றன. 1993 மற்றும் 1996இல் பி.வி.நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, இந்தியாவுடன் சில எல்லை ஒப்பந்தங்களை சீனா ஏற்படுத்திக் கொண்டது. அதன் பிறகு 2005, 2012, 2013 ஆகிய ஆண்டுகளிலும் மூன்று ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. அவற்றின்படி, இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள எல்லாவித எல்லை பிரச்சினைகளும் பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இரு தரப்புகளும் உறுதி ஏற்றன. எந்தக் காரணத்தைக் கொண்டும் போர் அச்சுறுத்தலில் ஈடுபடுவதில்லை என்றும் இரு நாடுகளும் தீர்மானித்தன.

1989இலிருந்து இந்தியாவில் அமைந்த எல்லா அரசுகளும் தமது அரசியல் சார்பை ஒதுக்கிவைத்து சீனாவுடனான நல்லுறவை மீட்டெடுக்க முயற்சிகளை எடுத்திருக்கின்றன. எல்லையில் பிரச்சினைகள் இருந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவு தொடர்கிறது. அதன் மூலம் நம்பிக்கையை மீட்டெடுத்து நல்லுறவை ஏற்படுத்த முடியும் என்று இந்தியா நினைக்கிறது. 2020 ஏப்ரல் மாதம் கிழக்கு லடாக்கில் சீனா நடத்திய எல்லை கட்டுப்பாட்டுக்கோட்டு அத்துமீறல் அனைத்து முயற்சிகளையும் தடம்புரள வைத்திருக்கிறது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே முறையாகவும் இரு தரப்புகளும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் இதுவரை எல்லை வரையறுக்கப்படவில்லை. அதனால் இரு தரப்புகளின் எல்லை குறித்த பார்வை வேறுபடுகிறது. நமது எல்லை என்று இந்தியா கருதும் பகுதிகளை சீனா தன்னுடையது என்றும் சீனா கருதும் பகுதிகளை இந்தியா தன்னுடையது என்றும் நினைக்கின்றன. அதுபோன்ற இடங்களில்தான் பதற்றமும் மோதலும் ஏற்படுகின்றன.

கடந்த இரு ஆண்டுகளாகவே ரோந்துப் பணியிலிருக்கும் வீரர்களும் சில பகுதிகளில் துருப்புகளும் நேருக்கு நேர் மோதும் போக்கு அதிகரித்திருக்கிறது. காயமடைதலும் தவிர்க்க முடியாததாகி இருக்கிறது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லை குறித்த கருத்து வேறுபாடு நிலவும் இடங்களில் ஒன்றுதான் தற்போது பதற்றம் நிலவும் யாங்ட்ஸி.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு வரையிலான தனது பகுதியில் சீனா கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி இருக்கிறது. எல்லையை ஒட்டிய பகுதிகளில் உள்ள முகாம்களின் எண்ணிக்கையையும் அதிகரித்திருக்கிறது. எந்த நேரத்திலும் அதிவேகத்தில் தனது துருப்புகளை முகாம்களில் இருந்து எல்லையை ஒட்டிய பகுதிகளுக்குக் கொண்டு செல்ல முடியும். தனது எல்லையின் ஒவ்வோர் அங்குலத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று சீன அரசு துருப்புகளுக்கு கடுமையான உத்தரவை பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

2014இல் நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, எல்லைப்புற கட்டமைப்பை மேம்படுத்துவதில் தீவிரம் காட்டி அதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கிறது. இந்திய இராணுவத்தால் முன்னெப்போதையும்விட துருப்புகளையும் ஆயுதங்களையும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதிக்கு விரைந்து கொண்டு செல்ல இப்போது முடியும். ஆனாலும்கூட, இயற்கை நம்மைவிட சீனாவுக்குத்தான் சாதகமாக இருக்கிறது.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் இந்தியப் பகுதிகள் இயமமலையின் உயரமான பகுதிகள். அங்கே சாலைகள் அமைக்கவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தேவையான ஆட்களையும் பொருட்களையும் அழைத்துச் செல்வது கடினம். அதே நேரத்தில் சீனாவைப் பொறுத்தவரை, அதன் பகுதிகள் திபெத்திய சமவெளியில் இருப்பதால் அங்கு எளிதாகக் கட்டமைப்பை மேம்படுத்த முடியும்.

எல்லைக் கோட்டை வரையறுப்பதில் சீனா தயக்கம் காட்டுவதற்கு காரணம் இருக்கிறது. ஒருவேளை அதுவே எல்லையாக நிர்ணயிக்கப்பட்டுவிடுமோ என்பதுதான் சீனாவின் அச்சம். பலமுறை பேச்சுவார்த்தைகளில் அந்த அச்சத்தை போக்கியும்கூட சீனா அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை. இதுதான் இந்திய - சீன எல்லை பிரச்சினையின் அடிப்படைக் காரணம். சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குக்குப் பின்னால் ஒட்டுமொத்த சீனாவும் இருப்பதுபோல் இந்திய எதிர்க்கட்சிகள் தமது அரசியல் கருத்துவேறுபாடுகளை அகற்றி வைத்துவிட்டு சீனாவுடனான எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முழு அதிகாரத்தையும் இந்தியப் பிரதமர் மோடிக்கு வழங்கினால் மட்டுமே, சீனாவுடனான பேச்சுவார்த்தை வெற்றி பெறும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் தமது மனமாச்சரியங்களை அகற்றிவைத்துவிட்டுப் பேசினாலொழிய இதற்குத் தீர்வு ஏற்படாது.

# பேருவளை கெச்சிமலை தர்காவில் புனித புஹாரி தமாம் மஜ்லிஸ்

பேருவளை பீ.எம்.முக்தார்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை கெச்சிமலை தர்ஹாவில் நடைபெற்று வரும் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் மஜ்லிஸின் தமாம் வைபவம் 2022- 12- 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை மற்றும் வக்ப் சபை ஆகியவற்றின் உறுப்பினர் சங்கைக்குரிய மௌலவி ஸக்கி அஹமத் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் மார்க்க அறிஞர்கள், உலமாக்கள், முரீதீன்களின் பங்குபற்றலுடன் நடைபெறும்.



கடந்த நவம்பர் 21ஆம் திகதி மேற்படி மஜ்லிஸ் ஆரம்பமானது. வெள்ளிக்கிழமை தவிர ஏனைய நாட்களில் கதீஸ் பராயணம் மற்றும் மார்க்கச் சொற்பொழிவு இடம்பெறுவதோடு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி இரவு கத்தாத் ராதிப், விசேட மார்க்கச் சொற்பொழிவு அதனையடுத்து தர்காவில் அடங்கப்பட்டுள்ள அஷ் ஷெய்க் அஷ்ரப் வலியுல்லாஹ் ஸியாரத் நிகழ்ச்சியும் இடம்பெறும்.

மேலும், 25ஆம் திகதி அதிகாலை அல்குர்ஆன் தமாம் வைபவம் இடம்பெறுவதோடு, நண்பகல் தமாம் மஜ்லிஸ் இடம்பெறும்.

தமாம் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 71ஆவது வருடமாகவும் நேரடியாக அஞ்சலி செய்யும்.

நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் , பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத் உட்பட அரசியல்வாதிகள், பிரமுகர்கள், தரீக்காக்களின் இஹ்வான்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்கள் கலந்துகொள்வர். 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் தர்காவுக்கு பெண்கள் வருவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. பெரிய கந்தூரி தமாம் நிகழ்வில் பங்குபற்றும் மக்களின் பாதுகாப்புக் கருதி பேருவளை பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.







கண்டி-பேராதனை வீதியிலுள்ள லைட் ஹவுஸ் கிறிஸ்தவ தேவாலயத்தில் நத்தார் இன்னிசை கீதம் இலங்கை சுயாதீன திருச்சபைத் தலைவர் அதிவண. கலாநிதி சி. நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பெருமளவிலான பக்த அடியார்கள் கலந்துகொண்டு தேவ ஆராதனையில் ஈடுபட்டனர். (இக்பால் அலி)

## இன்றைய நாளில்...

- 1871 – யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுருப் பதவிகள் வழங்கப்பட்டன.
- 1877 – யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் வாந்திபேதி மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் இறந்தனர்.
- 1929 – இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியாவின் விடுதலையை அறிவித்தது.
- 1932 – பி.பி.சி. உலக சேவை ஆரம்பமானது.
- 1972 – அப்பல்லோ திட்டம்: சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பல்லோ-17 பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பியது.
- 1983 – உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக் கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு உதைபந்தாட்ட அமைப்பின் தலைமையகத்திலிருந்து திருடப்பட்டது.
- 2001 – அதியுயர் வளிமண்டல அழுத்தம் (1085.6 hPa) மங்கோலியாவில் பதிவுசெய்யப்பட்டது.
- 2013 – கையா விண்கலத்தை ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஏவியது.

## நக்கல் நமசிவாயம்



# சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அறவிடப்படும் காப்புறுதிக் கட்டணம் குறைப்பு

## ஆனந்தகுமார், யோகராஜன் நடவடிக்கை

இலங்கையிலிருந்து சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அறவிடப்படும் 4,000 ரூபா காப்புறுதி நிதியை 713 ரூபாவாக அரசாங்கம் குறைத்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

சபரிமலை யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு அறவிடப்படும் காப்புறுதியை குறைப்பதற்கு ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன், எஸ்.ஆனந்தகுமார் ஆகியோர் அரசாங்கத்துடன் பலகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எஸ்.ஆனந்தகுமார்,

இம்மாத இறுதியில் சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு விசா கட்டணத்துக்கு மேலதிகமாக 4,000 ரூபா காப்புறுதி நிதியும் செலுத்தவேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந்த நிதியை குறைந்தளவில் அறவிட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இந்திய உதவி உயர்ஸ்தானிகர், பௌத்த கலாசார திணைகளதின் செயலாளர் உட்பட உரிய தரப்பினிடம் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

பேச்சுவார்த்தைகளின் பிரகாரம் காப்புறுதி நிதியை 713 ரூபாவாக குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

மேட்டுத்தெரு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயத்தின் தலைவர் திருக்கேஷ் செல்லசாமி, ரவீந்திரன் குருசாமி, ரவீந்திர குமார் குருசாமி உள்ளிட்டவர்களும் இந்து கலாசார திணைக்களத்தின் அதிகாரிகளும் அரசாங்க அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் காலத்தில் அனைத்து தேர்தல்களிலும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் போட்டியிடும்

## முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் அறிவிப்பு





(அஷ்ரப் ஏ சமத்)

எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டு கடந்த 12 வருடங்களானாலும் இனி எதிர்காலத்தில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி என்ற முறையில் நாங்கள் மிகவும் உத்வேகத்துடன் செயல்பட முடிவு செய்துள்ளோம். எதிர்வரும் காலத்தில் இடம்பெறும் அனைத்து தேர்தல்களிலும் எமது கட்சி கொழும்பு, களுத்துறை வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுவோம். அங்கு எமது கட்சியின் செயல்பாடுகள் கடந்த காலத்தில் இடம்பெற்றன. எதிர்காலத்தில் நாடுமுழுவதிலும் எமது கட்சி விஸ்தரிக்கப்படும் - இவ்வாறு முன்னாள் பிரதியமைச்சரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் காங்கிரஸ் என்ற புதிய கட்சிக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், அக்கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் (17) கொழும்பு சுகததாஸ விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்றது. அக்கட்சியின் தலைவராக பிரபா கணேசன் செயற்படவுள்ள நிலையில், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் சின்னமாக தபால் பெட்டி சின்னம் அறிவிக்கப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளராக சுரேஷ் கங்காதரனும், தேசிய அமைப்பாளராக ராஜேந்திரனும், பிரதித் தலைவராக குமரகுருபரனும் நியமிக்கப் பட்டுள்ளனர். இந்நிகழ்வில் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த பிரபா கணேசன் மேலும் கூறியதாவது,

12 வருட காலம் எமது கட்சியை தேர்தல் ஆணையாளர் பல காரணங்கள் காட்டி அங்கீகரிக்க வில்லை. இருப்பினும் இம்முறை எமக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டு கடந்த 12 வருடங்களானாலும் இனி எதிர்காலத்தில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி என்ற முறையில் நாங்கள் மிகவும் உத்வேகத்துடன் செயல்பட முடிவு செய்துள்ளோம். எதிர்வரும் காலத்தில் இடம்பெறும் அனைத்து தேர்தல்களிலும் எமது கட்சி கொழும்பு, களுத்துறை வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுவோம். அங்கு எமது கட்சியின் செயற்பாடுகள் கடந்த காலத்தில் இடம்பெற்றன. எதிர்காலத்தில் நாடுமுழுவதிலும் எமது கட்சி விஸ்தரிக்கப்படும்.


தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதே எமது நோக்கமாகும். குறிப்பாக, கொழும்பு மாவட்டத்தில் அடிப்படை வசதிகளின்றி கஷ்டப்படும் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர். கொழும்பு மாவட்ட பாடசாலைகளின் வளர்ச்சி 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு அரசியல்வாதிகளினாலும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. நான் பிரதியமைச்சராகவும் முன்னைய அரசுடன் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் 45இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்திருந்தேன். அதன் பின்னர் கொழும்பில் எவ்வித அபிவிருத்தியும் இடம் பெறவில்லை. 6 மாத காலங்கள் பிரதியமைச்சராக இருந்த காலத்தில் பாடசாலைகளில் கணினிக்கூடங்களை ஆரம்பித்து வைத்தேன். மக்களது வாக்குகளைப் பெற்றவர்கள் எவ்வித அபிவிருத்தியையும் செய்ததாகத் தெரியவில்லை. கோஷம் மட்டும் போட்டு நமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது. அபிவிருத்திகளையும் மக்களுக்கு பெற்றுக்கொடுத்து அவர்களது அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் வேண்டும்.

சிறுபான்மைகளது தேவைகள், அடிப்படை வசதிகள் கல்வி, தொழில் வாய்ப்பு, வீடமைப்பு, வியாபாரம், இளைஞர்களது அபிலாஷைகளை நாம் செயல்படுத்தி வருகின்றோம். போராட்டத்தில் ஈடுபட்ட பல இளைஞர், யுவதிகள் எமது கட்சியுடன் இணைந்து வருகின்றனர். அவர்கள் புதியதொரு அரசியல் கட்சியில் முன்னெடுத்துச் செல்வதனையே விரும்புகின்றனர். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலும் எமது கட்சி போட்டியிடும். நாம் எவரது வாக்குகளையும் தட்டிப்பறிக்கவோ அல்லது எவரையும் விமர்சிக்கவோ விரும்பவில்லை. மாறாக, நாம் எதனை எவ்வாறு மக்களுக்கு சேயையாற்றவுள்ளோம் என்பதனையே தெரிவிக்க விரும்புகின்றோம். 2010 முதல் 2015 வரை இருந்த காலத்தில் கொழும்பு மாவட்ட தமிழ் பாடசாலைகளுக்கு ஆற்றிய சேவையினை தமிழ் மக்கள் இன்றும் மறக்கவில்லை.

பெற்றோர்கள் இன்றும் பாடசலை அனுமதிக்காக என்னிடம்தான் வருகின்றார்கள். எமது கட்சியின் முன்னைய மாகாண சபை உறுப்பினர், தேசிய அமைப்பாளரான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ் ராஜேந்திரன், பிரதித் தலைவரான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கலாநிதி நல்லையா குமருபரன் போன்ற பல்வேறு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இணைந்து புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டு கட்சி கட்டியெழுப்பப்படும். எங்களோடு இணைந்து செயலாற்ற வாருங்கள் என இளைஞர்களுக்கு நாங்கள் அறைகூவல் விடுக்கின்றோம். - என்றார் முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன்.

# துர்க்மெனிஸ்தான் மஜ்லிஸ் தலைவரிடம் தூதுவர் விஸ்வநாத் அபோன்சு நற்சான்றிதழை கையளிப்பு





துர்க்மெனிஸ்தானின் மஜ்லிஸ் (நாடாளு மன்றத்தின்) தலைவரிடம் (சபாநாயகர்) 2022 டிசம்பர் 08ஆம் திகதி அஷ்கபாத்திலுள்ள மஜ்லிஸ் வளாகத்தில் வைத்து தூதுவர் ஜி.எம்.வி.விஸ்வநாத் அபோன்சு தனது நற்சான்றிதழை கையளித்தார்.

துர்க்மெனிஸ்தான் குடியரசுக்கான இலங்கைத் தூதுவரை வரவேற்ற மஜ்லிஸ் தலைவர் குல்சாத் மம்மெடோவா, தூதுவர் விஸ்வநாத் அபோன்சுவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை அவர் தொடர்ந்தும் வலுப்படுத்துவார் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் இலங்கை மக்களின் வாழ்த்துகளை ஜனாதிபதி செர்தார் பெர்டிமுஹமடோவ் மற்றும் துர்க்மெனிஸ்தான் மக்களுக்குத் தெரிவித்த தூதுவர், குறிப்பாக வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, சுற்றுலா மற்றும் சட்டமன்றத் துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.





கண்டி, கட்டுகலை பள்ளிவாசலின் தலைவர் அப்சால் மரைக்கார் மற்றும் நிர்வாகத்தினரின் அழைப்பை ஏற்று பைத் அல்-முகத்திஸ் பள்ளிவாசலின் பிரதான இமாம் அஷ்ஷெய்க் அலி உமர் அல்-அப்பாஸி கண்டி, கட்டுகலை ஜும்மா பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்டார். கட்டுகலை அல்-புர்க்கானிய்யா அரபுக் கல்லூரி மாணவர்களின் விசேட வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் விசேட வெள்ளிக்கிழமை ஜம்ஆப் சொற்பொழிவினையும் ஜும்ஆத் தொழுகையினையும் பைத் அல்-முகத்திஸ் பள்ளிவாசலின் பிரதான இமாம் அலி உமர் அல்-அப்பாஸி நடத்தி வைத்தார். இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் , கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே.ஆர்.ஏ.சித்தீக் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)

# தென்மாகாண மீனவர் பிரச்சினை: அமைச்சர் டக்ளஸ் நேரில் ஆராய்வு!

காலி மீன்பிடித் துறைமுகத்தில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலையின் செயற்பாடுகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் காலி மீன்பிடித் துறைமுகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அண்மையில் (16 ) நடைபெற்றது

தென்னிலங்கையில் அமைந்துள்ள மீன் சந்தைகளைப் பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலுணவுகள் அனைத்தும நியாயமான விலையிலும் சுகாதார முறையிலும் மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அதிகாரிகளுக்கு வலியுறுத்தியதுடன், சந்தை வியாபாரிகளுடனும் கலந்துரையாடினார்

இதேநேரம், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டுதலுக்கமைவாக, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தால் தென்னிலங்கையில் அமைந்துள்ள மீன்பிடித்



துறைமுகங்களின் புனரமைப்புப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

பேருவளை, மருதானை மீன்பிடி இறங்குதுறை யின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மணல் தூர்வாருதல் செயற்பாடுகளைப் பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த கடற்றொழில் சங்கத்தின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'ரெயின்போ' முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா





(செ.திவாகரன்)

நானுஓயா டெஸ்போட் ஏ பிரிவு 'ரெயின்போ' முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா, கலைநிகழ்ச்சிகள் நு/எபட்ஸ்போட் தமிழ் வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நு/மெரயா த.ம.வி. ஆசிரியர் கிருஷ்ணகுமார் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக நு/சென்கூம்ஸ் த.ம.வி. அதிபர் தங்கராஜ் , நு/எபஸ்போர்ட் த.வி. அதிபர் கலைச்செல்வன், நு/உடரதால த.வி. அதிபர் போல்ராஜ், டெஸ்போர்ட் தோட்ட குடும்பநல உத்தியோகத்தர் லோரன்ஸ், டெஸ்போர்ட் தோட்ட குடும்பநல தாதி திருமதி ஜெயமதி, டெஸ்போர்ட் தோட்ட ஸ்ரீமுத்துமாரியம்மன் குருக்கள், ஆசிரியர்கள், தோட்டத் தலைவர்கள், நலன் விரும்பிகள், இளைஞர்கள், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

சிறார்களின கண்கவர் நடன மற்றும் பாடல் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன். மாணவர்கள் விசேடமாக அதிதிகளால் கௌரவிக்கப்பட்டு பரிசுப் பொருட்களுடன் சிறப்பாக வழியனுப்பி வைக்கப்பட்டனர்.


திகதி 16.12.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4971
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,183,720.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,870,117.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 3 4 9 4 4 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3213
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,851,760.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 02 10 28 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,290,614.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1426
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,262,040.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 6 3 1 0 1 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,118,743.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1001
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,649,540.00
வெற்றி இலக்கினம் B வெற்றி இலக்கங்கள் 04 55 59 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 137,809,442.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 280
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.11,305,245.80
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 14 16 52 55
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,500,000.00

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1319
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,686,760.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.286,763,654.00
Z 09 14 26 36 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 17.12.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4972
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,992,820.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,562,999.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 4 5 1 9 7 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3214
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,483,120.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 15 21 71 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,647,646.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1427
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,060,080.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 3 5 5 8 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,182,137.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1002
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,404,200.00
வெற்றி இலக்கினம் Y வெற்றி இலக்கங்கள் 08 36 72 82
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 138,017,941.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 281
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,429,520.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 18 31 41 54
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,555,323.40

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1320
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,562,920.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.287,004,410.00
A 20 26 28 32 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# எல்ல சுற்றுலாப் பகுதியை அபிவிருத்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

(எம்.செல்வராஜா)

எல்ல சுற்றுலா வலயத்தை பாரிய திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். சுற்றுலா அமைச்சு, நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியன இணைந்து 4 மாதங்களுக்குள் அதற்கான திட்டத்தை தயாரித்து தன்னிடம் ஒப்படைக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். எல்ல வர்த்தகர்கள் சங்கத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை (16) நடந்த கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

எல்ல சுற்றுலா வலயத்தை முறையாகவும், திட்டமிட்ட வகையிலும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இயற்கைக்கு பங்கம் ஏற்படாத வகையில் நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் முதற்கட்டமாக எல்ல சுற்றுலா வலயம் முறையான திட்டத்துடன் அபிவிருத்தி செய்யப்பட்டு, அதன் பின் ஊவா மாகாணம் முழுவதையும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த இடமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார்.

இதன்போது, எல்ல பிரதேசத்திற்கு வருகை தந்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பணிகளின் சுற்றுலா அனுபவங்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, சுற்றுலாப் பணிகளுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.





எல்ல வர்த்தகர்கள் சங்கத்துடன் நடந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

எல்ல இப்பகுதி மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு சுற்றுலாப் பிரதேசமாகும். அது இப்போது இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பாரிய பங்களிக்கிறது. புதிய, பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இந்த சுற்றுலாப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கிறோம். இங்கு எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு குறுகிய காலத் தீர்வுகள் வழங்கப்படும். தற்போது மாலைதீவுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஒரு நாளைக்கு சுமார் 500 டொலர்களை செலவிடுகிறார்கள். ஆனால், எல்ல பிரதேசத்திற்கு வருவோர் ஒரு நாளைக்கு 20 டொலர்களையே செலவிடுகின்றனர். இந் நிலையை நாம் மாற்ற வேண்டும். சுற்றுலாத் துறையை மேம்படுத்தபயிற்சி பெற்றபணியாளர்கள் தேவை. மிகவும் அனுபவம் வாய்ந்த சுற்றுலாத் தொழிலாளர்கள் கடந்த கொரோனா நெருக்கடியின்போது நாட்டை விட்டு வெளியேறி விட்டனர்.

500 டொலர்களை செலவளிக்கும் சுற்றுலாப் பயணிகள், நல்ல சேவையை எதிர்பார்க்கிறார்கள். அத்தகைய சேவையை வழங்க பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவை. இந்த விரிவான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிறந்த சுற்றுலா சேவையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஊவா மாகாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் குறைந்தது 7 நாட்களுக்கு தங்கியிருக்க வேண்டும். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும். கிழக்கு மாகாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை அதன் பின்னர் எல்லவுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட வேண்டும். இந்த புதிய அபிவிருத்தித் திட்டத்தில் மத்தள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து அங்கிருந்து நேரடியாக எல்லவுக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் வேலைத்திட்டம் தேவை. இத்திட்டங்கள் குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் செலுத்துகின்றன. மேலும், எமது வங்கித் துறையையும் வீழ்ச்சியடையாமல் பாதுகாக்க வேண்டும். வங்கிக் கட்டமைப்பு நிலைகுலைந்தால், சுற்றுலாப்பயணிகள் வர மாட்டார்கள். எமது திட்டங்களுக்கு ஒத்துழைக்குமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

ஜனாதிபதி ரணில் எல்ல வர்த்தகர்களால் முன்வைக்கப்பட்ட பல பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்தமைக்காக வர்த்தகர்கள் தமது பாராட்டுகளைத் தெரிவித்தனர். இச்சந்திப்பில், அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஹரீன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பதுளை மாவட்டச் செயலாளர் தமயந்தி பரணகம உள்ளிட்ட பலர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.





**உக்குவளை மனிதவள அபிவிருத்திப் பகுதியின் ஏற்பாட்டில் மாத்தளை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் இரத்தம் வழங்கும் நிகழ்வு உக்குவளை தாருல் ஹிக்மா பாடசாலையில் நடைபெற்றது. இரத்த வங்கியின் பொறுப்பாளர் வைத்தியர் வேரகம தலைமையிலான தாதியினர் குழுவினரையும் உக்குவளை மனிதவள அபிவிருத்திப் பகுதி உறுப்பினர்களையும் உறுப்பினரொருவர் இரத்தம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.**

**(உக்குவளை நிருபர்)**

# நுவரெலியா மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

(செ.திவாகரன்)

நுவரெலியா மாநகரசபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் 19 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 6ஆவது அத்தியாயத்தின் 211ஆவது பிரிவின்படி நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை கடந்த வியாழக்கிழமை (15) மாநகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு 19 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் மாநகர முதல்வருமான மஹிந்த தொடம்பே கமகே வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. 23 உறுப்பினர்களை கொண்ட நுவரெலியா மாநகரசபையில் 20 உறுப்பினர்கள் மாத்திரம் கலந்துகொண்டனர். வரவு-செலவுத் திட்டத்தை சபைக்கு சமர்ப்பித்த நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன உரையாற்றுகையில்,

எதிர்வரும் 2023ஆம் ஆண்டில் 112 கோடியே 40 இலட்சத்து 43 ஆயிரத்து 300 ரூபா மீண்டுவரும் வருமானம் மூலமும் 43 கோடியே 10 இலட்சம் ரூபா மூலதன வருமானம் மூலமும் மொத்தமாக 155 கோடியே 50 இலட்சத்து 43 ஆயிரத்து 300 ரூபா மொத்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றேன். அந்த வருமானம் மூலம் எதிர்வரும் ஆண்டிற்காக 62 கோடியே 68 இலட்சத்து 61 ஆயிரத்து 600 ரூபா மீண்டும் வரும் செலவு மற்றும் 92 கோடியே 81 இலட்சத்து 46 ஆயிரத்து 400 ரூபா மூலதனச் செலவு ஆகியவற்றுடன் மொத்தமாக 155 கோடியே 50 இலட்சத்து 8 ஆயிரம் ரூபா தொகையை செலவு செய்வதற்கு எதிர்பார்க்கிறேன். 2023இல் மொத்த செயற்பாட்டு செயற்றிட்டங்கள் மூலம் 35 ஆயிரத்து 300 ரூபா மிகையை நோக்கி அண்மிப்பதற்கு எதிர்பார்த்து எதிர்வரும் ஆண்டிற்கான எனது வரவு-செலவுத்திட்ட முன்மொழிவை சபையில் சமர்ப்பிக்கின்றேன். இலங்கையின் சுற்றாடல் நேய பசுமை நகரை அமைத்து ஆசியாவிலேயே மிகச் சிறந்த மாநகரசபையாக நிறுவும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தை நான் சமர்ப்பித்துள்ளேன் என்றார்.

# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு யாழில்





(யாழ். நிருபர்)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தலைமையில் இடம்பெற்ற இத் தேசிய மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர், தேசிய அமைப்பாளர் க.துளசி, உபதலைவர் ந.நகுலேஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா, வடமாகாண சபை முன்னாள் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், - ஜனநாயகப் போராளிகள் கட்சியின்



வடக்கு கிழக்கு மாகாண உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை ஜனநாயக ரீதியில் அரசியல் நீரோட்டத்தில் இணைத்து ஜனநாயகப் போராளிகள் கட்சியை ஆரம்பித்து ஏழு வருடங்களின் பின்னர் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பு அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், கட்சியின் கொள்கைப் பிரகடனம் கட்சியின் தலைவரால் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன், வருகை தந்த அரசியல் பிரமுகர்களின் வாழ்த்து மற்றும் கருத்துரைகளும் இடம்பெற்றிருந்தன.

கட்சியின் தலைவராக சி.வேந்தன், உபதலைவராக ந.நகுலேஸ், செயலாளராக இ.கதிர், உபசெயலாளராக த.கவியரசன், பொருளாளராக த.விதுரன், தேசிய அமைப்பாளராக க.துளசி, மட்டு அம்பாறை மாவட்ட இணைப்பாளராக ந.நகுலேஸ், வவுனியா மாவட்ட இணைப்பாளராக நெல்சன், திருகோணமலை மாவட்ட இணைப்பாளராக நவமேனன், யாழ். மாவட்ட இணைப்பாளராக கவியரசன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராக கருணாகரன், முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளராக ஆதவன், மன்னார் மாவட்ட இணைப்பாளராக ஜீவா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட மாகாண கல்வித் திணைக்களத்தில் நிதி மோசடியில் சிக்கிய உத்தியோகத்தர்

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் சுமார் 2 இலட்சத்துக்கு அதிகமான பணத்தை சுருட்டியமை தெரியவந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

வட மாகாண கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் குறித்த உத்தியோகத்தர் ஆசிரியர்களுக்கான சில கொடுப்பனவுகளை வங்கிகளில் வைப்புச் செய்யும் உத்தியோகத்தராக செயற்பட்டு வந்துள்ளார்.


இந்நிலையில், அவ்வாறு கொடுப்பனவுகளை வைப்பிலிடும்போது உறுதிச் சீட்டுகளில் மாற்றத்தை ஏற்படுத்தி பணத்தை கையகப்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரை தொடர்புகொண்டு கேட்டபோது இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றமை தொடர்பில் அறியத் தரப்பட்டுள்ளது.

குறித்த உத்தியோகத்தரை தற்காலிகமாக இடைநிறுத்தி மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# மார்கழி இசை விழா எதிர்வரும் 27ஆம் திகதி யாழில் ஆரம்பம்

(யாழ். நிருபர்)



யாழ். இந்தியத் துணைத்தூதரகம் நல்லூர் சைவ தமிழ் பண்பாட்டுக் கழகம் மற்றும் யாழ்ப்பாண வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசை விழா எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் 29ஆம் திகதிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரை இடம்பெறும் என யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் குறித்த உற்பத்தியாளர்களின் கண்காட்சியும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிற்கு அண்மையில் உள்ள மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உள்ளூரில் காணப்படுகின்ற கலைஞர்களது திறமைகளையும் அவர்களுடைய கலைத்திறனையும் வெளிக்கொணர்வதற்காகவே குறித்த நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக யாழ். வணிகர் கழகம் தெரிவித்தது.

இந்நிகழ்வுகளில் இலங்கை கலைஞர்கள் மட்டுமின்றி இந்திய கலைஞர்களும் இணைந்து தங்களுடைய கலைத் திறனை வெளிப்படுத்த உள்ளனர். குறித்த நிகழ்விற்கு பொதுமக்களுக்கு எந்தவித கட்டணங்களும் வசூலிக்கப்படாது இலவசமாக பார்வையிட முடியும்.

மேலும் குறித்த நிகழ்வுகளை யாழிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சிகள் ஊடாக மக்கள் நேரலையாக வீட்டில் இருந்தும் காணக்கூடிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன - என்றார்.

# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(மன்னார் நகர் நிருபர்)



மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த முகம்மது இப்ராஹிம் அப்துல் ரஷாக் அகில இலங்கை சமாதான நீதவானாக மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் மன்னார் புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்டவர்.

மன்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், மன்/எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் உயர் கல்வியையும் தொடர்ந்தார்.

இவர் PSL நிறுவனத்தில் மாவட்ட இணைப்பாளராக கடமையாற்றியதுடன், தற்போது Volunteers for LIFE நிறுவனத்தின் இணைப்பாளராக செயற்பட்டு வருகின்றார்.

அதேநேரம், இவர் பல தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து இளைஞர்களுக்கான பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதுடன், மாவட்ட மத நல்லிணக்கக் குழு செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று

(சாவகச்சேரி நிருபர்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை மற்றும் சாவகச்சேரி கலாசார மன்றம் ஆகியன இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வு இன்று (19) பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி இராஜமல்லிகை மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சி.சுதோகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினராக பொன்.ஸ்ரீவாமதேவனும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பண்பாட்டுப் பெருவிழாவில் விருது வழங்கல், பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகள் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியலமைப்புப் பேரவையானது நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்க வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

அரசியலமைப்புப் பேரவையில் சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புகளுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கும் தேசிய சமாதானப் பேரவை, நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கக்கூடியதாக அரசியலமைப்புப் பேரவை அமையவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் சமாதானப் பேரவை கூறியிருப்பதாவது;

அரசியலமைப்புப் பேரவை மீண்டும் அமைக்கப்படுவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் மட்டுமீறிய அதிகாரங்களைக் குவித்த அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை இரத்துசெய்து அண்மையில் கொண்டுவரப்பட்ட 21ஆவது திருத்தத்தின் மிகவும் நலமிக்க அம்சமாகும். அரசியலமைப்புப் பேரவை அரசாங்க உறுப்பினர்களையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் பக்கச்சார்பற்ற சிவில் சமூக உறுப்பினர்களையும் உள்ளடக்கிய அரசியல் ரீதியில் பக்கச்சார்பற்ற ஒரு அமைப்பாகும்.

அரசும் அதன் நிறுவனங்களும் நாட்டின் நலன்களுக்காக சிறப்பாக செயற்படக் கூடியதாக அவற்றை வலுப்படுத்துவதற்கு அரசியலமைப்புப் பேரவை பங்களிப்புச் செய்யும் என்பதே நேர்மறையான எதிர்பார்ப்பாகும்.

ஆனால், அரசியலமைப்புப் பேரவையில் சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தப் போகும் உறுப்பினர்களை நியமிப்பதற்கு கடைப்பிடிக்கப்படும் முறை விசனத்தை தருவதாக இருக்கிறது. பேரவையில் உறுப்பினராக இருக்க விரும்புபவர்களிடமிருந்து தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்கள் கோரப்பட விருப்பதாக அரசாங்கம் விளம்பர அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

எந்தவொரு அரசியல் கட்சியிலும் உறுப்புரிமையைக் கொண்டிருக்காமல், பொது வாழ்விலும் துறைசார் வாழ்விலும் தங்களுக்கென்று ஒரு பெயரை ஏற்படுத்திக்கொண்ட நேர்மையும் மேன்மையும் மிக்க நபர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு விரும்பாமல் இருக்கலாம்.

நியமனங்களைச் செய்வதற்கான ஏற்பாடொன்று இந்த நடைமுறைகளில் சேர்க்கப்படவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. பேரவையில் சிவில் சமூகத்தின் சார்பில் பிரதிநிதிகளாக இருக்கவேண்டியவர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இலங்கையின் பன்முக சமுதாய பின்புலத்தில், அரசிலமைப்புப் பேரவைக்கான சிவில் சமூக பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் சகல சமூகங்களையும் உள்வாங்கும் கோட்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கைகள் அமையவேண்டும். அரச அதிகாரிகளின் தீர்மானங்கள் இலங்கைச் சமுதாயத்தின் பல்வகைகையையும் பன்முகத்தன்மையையும் மனதிற் கொண்டதாக இருக்கவேண்டும். இனம், மதம் ஆகியவற்றை கணக்கிலெடுக்க வேண்டும். இதில் சாதி, பால், மாற்றுத்தினாளிகள், தொழில் மற்றும் பிராந்தியங்களும் அடங்கும்.

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

நாடு இன்று சிக்கியுள்ள பொருளாதார மற்றும் அபிவிருத்தி நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசியல் தலைமைத்துவங்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஐக்கியம் முக்கியமானது.

அரசையும் தேசத்தையும் கட்டியெழுப்பும் பணிகள் தாமதமின்றி முன்னெடுக்கப்படுவதற்கு ஏதுவாக அரசியலமைப்புப் பேரவை விரைவில் தெரிவு செய்யப்படவேண்டும் என்று நாம் கோருகிறோம்.







## அமைப்புகளுக்கான ஒருங்கிணைப்பும் அரசியல் பாடங்களும் கருத்தரங்கு





அமைப்பாளர்களுக்கான அமைப்புகளுக்கான ஒருங்கிணைப்பும், அரசியல் பாடங்களும் என்ற சமத்துவக் கட்சியின் கருத்தரங்கு நேற்று முன்தினம் (17) கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது.

கட்சியின் தலைவர் சு.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் மூத்த நிர்வாக சேவை அதிகாரி செல்வின் இரனியஸ், முன்னாள் விரிவுரையாளரும், அரசியல் சமூக ஆய்வாளருமான சிராஜ், வல்லமை பெண்கள் அமைப்பின் இயக்குநர் ரஜனி இராஜேஸ்வரி, அதிபர் தவநாயகம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

# பூனப்பிட்டி புனித லூசியா திருவிழா









**(உடப்பு செய்தியாளர்)**

புத்தளம் கட்டைக்காடு பங்கில் அமைந்துள்ள பூனப்பிட்டி புனித லூசியா முனிஸ்வரி ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி இறைவனின் ஆசியுடன் வணக்கத்துக்குரிய பங்குத் தந்தை ஜெயராசா அடிகளாரின் தலைமையில் நேற்று (18) காலை 8.30 மணிக்கு மிக விமரிசையாக ஆரம்பமானது.

அத்துடன், அருட்திரு கமல் அடிகளார், அருட்திரு ஸ்வான் டிகுருஸ் அடிகளார், கட்டைக்காடு உதவிப் பங்குத்தந்தை அருட்திரு டிசான் அடிகளார், திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரி அமித்தா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தார் கள். ஆலயத்தில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பூஜைகள் இடம்பெற்றதோடு, பேண்ட் வாத்தியக் குழுவின் இசையுடன் புனித லூசியா முனிஸ்வரியின் திருச்சுரூபம் ஆலயத்தின் உள்வீதி பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு பெருந்திரளான பக்தர்களுக்கு மத்தியில் இறை ஆசிகள் திருச்சுரூபத்தால் வழங்கப்பட்டு, பக்தர்களின் கரகோஷத்துடன் திருவிழா, திருப்பலிப்பூஜை 11.30 மணியளவில் நிறைவடைந்தது.

இதில் உடப்பு, பூனப்பிட்டி, வட்டவான், கட்டைக்காடு, பனிச்சவில்லு கிராம மக்கள் கலந்துகொண்டனர். அத்துடன், உடப்பு இந்து மக்களும் சமய வேறுபாடின்றி கலந்து கொண்டமை இங்கு குறிப்பிட்டத்தக்கது.





கிராண்ட்பாஸ் டிவோஸ் லேன் ஸ்ரீ ஞானபைரவர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீ ஐயப்பனுக்கு புஸ்பலங்கார பூஜை நிகழ்வு, சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெற்றதை படங்களில் காணலாம்.





## Research Engineers

lhlrshst shm9K m Gxc t kb lhlrshst sd KSC

Qualification: Bachelor's Degree in Civil Engineering

Apply: Chief Executive Officer, Lanka Hydraulic Institute LTD, 177, John Rodrigo Mawatha, Katubedda, Moratuwa.

## Supply chain executive

dx dronmr ha hlbshdr

- Required to purchase raw material from foreign suppliers
- Arrange all freight forwarding and clearance
- Work with BOI and SL customs and arrange BOI approval for imported machine parts

B mchc sd nehd

- Minimum 04 years' experience in import export operations
- Degree/ diploma in logistics or equivalent
- Overall knowledge in all logistics and procurement

An attractive remuneration package awaits the ideal candidate.

Interested candidates can apply by sending their CVs to

*db t sl dmsabnmmdbsdc l bnl*

Bnms bst r nm+83 665 260 023. +83 666217 012

ABnmmdbsdc ( us) Ksc

n9/6, R dlsnm cdmr,

Bnknl an /4

## Sales Manager

v dlk dot sdc bnl o mx hmsgd bnmr s t bshmr dbsn

dx dronmr ha hlbshdr

- Meeting the sales target of the organization
- Selling product and services to customers
- Performing cost- benefit analysis of potential and existing customers
- Map potential customers and generate leads and opportunities for the organization
- Set KPIs for the sales team
- Analyze territory and market potential, track sales and status report
- Supply management and with reports on customer needs, problems and interest
- Expedite resolutions for customer problems and maintain client centricity

B mchc sd nehd

- 10- 15 years' experience in sales and management role in building materials
- Proven track record of meeting sales targets and leading teams
- Good contact base with people in the construction industry
- Excellent interpersonal skills and communication skills in English and Sinhala/ Tamil
- Excellent coordination ability and decision-making skills

An attractive remuneration package awaits the ideal candidate.

Interested candidates can apply by sending their CVs to

*db t sl dmsabnmmdbsdc l bnl*

Bnms bst r nm+83 665 260 023. +83 666217 012

ABnmmdbsdc ( us) Ksc

n9/6, R dlsnm cdmr,

Bnknl an /4

## Director – Legal and enforcement / Director – Corporate Affairs

lhlrshst shm9Rdbt lshdr mc Dwbg mf d Bnl l hrr lnmneR hK m

Apply: The Director General, Securities and Exchange Commission of Sri Lanka, Level 29, East Tower, World trade Centre, Echelon Square, Colombo 01.

## Tea Quality Consultant

Bnl o mx9 mud lkx & Rnmr us KSC

Qualification: Degree, Minimum 15 years of Experience

Apply: *b ddr mud bnl*


# பெரண்டினா நிறுவனத்தினால் அம்பகமுவவில் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு





பெரண்டினா நிறுவனத்தின் ஏற்பாட்டில் அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட தோட்டங்களிலுள்ள இளைஞர், யுவதிகளை இனங்கண்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் சுமார் 20 இலட்சத் தொகைகொண்ட சுயதொழிலை மேம்படுத்துவதற்கான உபகரண உதவிகளை பெரண்டினா நிறுவனம் வழங்கியது.

இந்நிகழ்வில். பெரண்டினா நிறுவனத்தின் முகாமையாளர் பீ.எம்.ரஹீம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.ஆர்.சுஹைல் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

## வெடித்துச் சிதறியது உலகின் மிகப்பெரிய மீன்தொட்டி



கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றிருந்த 50 அடி உயர உலகின் மிகப் பெரிய மீன்தொட்டி திடீரென வெடித்துச் சிதறியுள்ளது.

ஜேர்மனியின் பேர்லின் நகரில் அலெக்சாண்டர்பிளாட்ஸ் என்ற இடத்தில் மத்திய சதுக்கம் பகுதியில் ரேடிசன் புளூ என்ற பிரபல ஹோட்டலொன்று அமைந்துள்ளது. கடந்த 2003ஆம் ஆண்டு 50 அடி உயரம் 30 அடி அகலத்தில் கண்ணாடி வடிவில் உலகளவில் மிகப் பெரிய மீன்தொட்டி இங்கு கட்டப்பட்டது. அந்த காலத்தில் ரூ.115.82 கோடி மதிப்பில் உருவான இந்த மீன்தொட்டி கின்னஸ் உலக சாதனை புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது.

மீன்தொட்டியில் 100 வகையான மீன்கள் என மொத்தம் 1,500 மீன்கள் வரை பார்வைக்காக வளர்க்கப்பட்டன. இந்த ஹோட்டலில் தங்க வருபவர்கள், உருளை வடிவில் அமைந்த மீன்தொட்டியின் கண்ணாடி பகுதியின் வழியே உள்ளே நீந்திச் செல்லக்கூடிய கடல்வாழ் மீன் இனங்களைப் பார்வையிட முடியும். இந்நிலையில், திடீரென மீன்தொட்டி வெடித்துச் சிதறியுள்ளது. அப்போது ஹோட்டலில் தங்கியிருந்த 300 பேர் பாதுகாப்பான பகுதிக்கு வெளியேற்றப்பட்டனர். 2 பேர் காயமடைந்துள்ளனர். மீன்கள் அனைத்தும் உயிரிழந்துள்ளன. இது சதித்திட்டமா என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## புதிய மனிதா பூமிக்கு வா..



தாயின் வயிற்றில் வளரும் சிசுவை, தனியாக வெளியே வைத்து வளர்க்கும் வகையில் செயற்கையான கருப்பையை உருவாக்கும் முயற்சியில் உலக ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆராய்ச்சியின் மாதிரி வீடியோவை எக்டோ லைஃப் (Ecto Life) என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி சாத்தியப்படும் பட்சத்தில் ஆண்டுக்கு 30,000 குழந்தைகள் வரை உருவாக்க முடியும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

### மீண்டும் கொரோனாவின் பிடிக்குள் சீனா




## பீஜிங்கில் அதிகரிக்கும் உயிரிழப்புகள்; சடலங்களால் நிரம்பி வழியும் தகனச்சாலைகள்

### 10 இலட்சம் பேர் உயிரிழக்கும் அபாயம் - நிபுணர்கள் எச்சரிக்கை

சீனத் தலைநகர் பீஜிங்கில் கொரோனா தொற்றால் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதையடுத்து, தகனக்கூடம் முன்னால் சடலங்களுடன் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன.

உயிரிழப்புகள் அதிகரிப்பதால் சவப்பெட்டிகளின் தேவையும் அதிகரித்துள்ளது. தொற்று தொடர்ந்து அதிகரித்து வருவதால் சாரதிகள், இறுதிச் சடங்குகள் செய்யும் ஊழியர்கள் பணியை செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர்.

கடந்த 7ஆம் திகதி கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு முன்பு இருந்ததைவிட தற்போது உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**10 இலட்சம் பேர் உயிரிழக்கும் அபாயம்**

இதேவேளை, சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதால், பாதிப்புகள் அதிகரித்து அடுத்த ஆண்டுக்குள் ஒரு மில்லியனுக்கும் அதிகமான உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாக அமெரிக்காவைச் சேர்ந்த சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீடு நிறுவனம் கணித்துள்ளது.

அதன்படி, அடுத்தாண்டு ஏப்ரல் முதலாம் திகதி சீனாவில் பாதிப்பு உச்சத்தைத் தொடும் என்றும் அப்போது இறப்புகள் 3 இலட்சத்தை எட்டி, சீன மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதிப்பகுதியில் கண்டறியப்பட்ட கொவிட் -19 வைரஸ், உலகம் முழுவதும் 220இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி பல இலட்சக்கணக்கான உயிர்களை காவுகொண்டது.

இந்நிலையில், உலக நாடுகள் ஒன்றிணைந்து கொரோனாவுக்கான தடுப்பூசிகளைக் கண்டுபிடித்து வழங்கியதினூடாக தொற்று கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தற்போது மீண்டும் சீனாவில் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரிக்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சபரிமலையில் 27இல் மண்டல பூஜை: 23இல் தங்க அங்கி பவனி புறப்பாடு

சபரிமலையில் எதிர்வரும் 27ஆம் திகதி மண்டல பூஜை நடைபெறுகிறது. இதற்காக தங்க அங்கி பவனி டிசம்பர் 23ஆம் திகதி ஆரன்முளாவிலிருந்து புறப்படுகிறது.

கார்த்திகை முதலாம் திகதிமுதல் 41 நாட்கள் நடைபெறும் பூஜை ஒரு மண்டல காலமாகும். இதன் நிறைவாக நடைபெறும் மண்டல பூஜை இந்த ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்று ஐயப்பன் விக்ரகத்தில் அணிவிக்க திருவிதாங்கூர் மன்னர் சித்திரை திருநாள் 453 பவுன் (3.624 கிலோ) எடை கொண்ட தங்க அங்கியை காணிக்கையாக வழங்கியுள்ளார்.

அங்கி, பத்தணந்திட்டா மாவட்டம் ஆரன்முளா பார்த்தசாரதி கோயில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அங்கு டிசம்பர் 23ஆம் திகதி அதிகாலை 5.00 மணிமுதல் பக்தர்கள் தரிசனத்துக்காக அங்கி வைக்கப்படும். காலை 7.00 மணிக்கு சபரிமலை உருவில் வடிவமைக்கப்பட்ட ரதத்தில் அங்கி புறப்படும். அன்று இரவு ஓமல்லூர் கோயிலிலும், 24ஆம் திகதி கோந்நி முருங்கமங்கலம் கோயிலிலும், 25ஆம் திகதி பெருநாடு சாஸ்தா கோயிலிலும் தங்கும் பவனி, 26ஆம் திகதி மதியம் பம்பை வந்தடையும்.

பம்பை கணபதி கோயில் அருகே பக்தர்களின் தரிசனத்திற்கு வைக்கப்படும், மாலை 3.00 மணிக்கு தலைச்சுமையாக நீலிமலை, அப்பாச்சிமேடு வழியாக சன்னிதானம் கொண்டுசெல்லப்படும். மாலை 5.30 மணிக்கு சரங்குத்தியில் தேவசம்போர்ட் அதிகாரிகள் வரவேற்பர். மாலை 6.30 மணிக்கு சன்னிதானத்தில் அங்கியை தந்திரியும், மேல்சாந்தியும் ஏற்று வாங்கி ஐயப்பன் விக்ரகத்தில் அணிவித்து தீபாராதனை நடத்துவர். டிசம்பர் 27ஆம் திகதி மதியம் தங்க அங்கி அணிவித்து மண்டல பூஜை நடைபெறவுள்ளது.

## மன்னார் வளைகுடா கடற்பகுதியில் மீன் பிடிக்கத் தடை



மன்னார் வளைகுடா கடற்பகுதியில் காற்று 60 கி.மீ. வேகத்தில் வீசுவதால் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.


பாம்பன், கீழக்கரை, ஏர்வாடி, வாலிநோக்கம் துறைமுகங்களில் 400இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. மறு உத்தரவு வரும்வரை தென்கடல் பகுதிக்கு மீன் பிடிக்கச் செல்லக்கூடாது என இந்திய மீன்வளத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், தெற்கு அந்தமான் கடற்பகுதிகள் மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் இன்று (திங்கட்கிழமை -19ஆம் திகதி) சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ. வேகத்தில் இடையிடையே 55 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.

எனவே, மீனவர்கள் இப்பகுதிக்கு மீன் பிடிக்கச் செல்லவேண்டாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உலக செய்திகள்

## மியன்மார் - ஆப்கான் - லிபியாவின் கோரிக்கைகளை நிராகரித்த ஐ.நா.



ஐ.நாவில் தங்கள் நாட்டின் இருக்கைகளைப் பெற முயற்சித்த மியன்மார், ஆப்கானிஸ்தான் மற்றும் லிபியா ஆகிய 3 நாடுகளின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

உலகிலுள்ள சில நாடுகளில் அரசுக்கெதிராக போராடி ஆட்சி கவிழ்த்து அங்கு கிளிர்ச்சியாளர்கள் அல்லது இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அவ்வாறு மியன்மாரில் இராணுவ ஆட்சியும், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியும், லிபியாவில் கிழக்கு கிளர்ச்சியாளர்கள் ஆட்சியும் நடந்து வருகின்றன. இந்த நாடுகள், 193 உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் இணைய முயற்சித்து வருகின்றன.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையில் தங்கள் நாட்டின் இருக்கைகளைப் பெறுவதற்கான இந்த நாடுகளின் முயற்சிகளை ஐ.நா. பொதுச் சபை நிரகாரித்துள்ளது.

## நிபந்தனைகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்ல தைரியமில்லாதவர்கள் தமிழ்த் தலைவர்கள்

### மக்களை மடையர்களாக்க வேண்டாமென ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கலந்துரையாடலுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தபோது, ''வடக்கு, கிழக்கில் தமிழர் பகுதியில் இடம்பெறும் இந்து ஆலையங்களின் இடிப்பு, காணிகள் அபகரிப்புகளை நிறுத்தினால்தான் பேச்சுவார்த்தைக்கு வருவோம்" என்று சொல்லும் தைரியம் தமிழ்த் தலைவர்களுக்கு இல்லை - என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் வீ. ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

70 வருடகாலமாக தீர்க்க முடியாத அரசியல் பிரச்சினையை ஒன்றரை மாதத்தில் ஜனாதிபதி தீர்ப்பாரென நம்பிச் சென்று, தமிழ் மக்களை மடையர்களாக்கின்றனரா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகத்தினால் நேற்று (18) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி தலைமையில் கடந்தவாரம் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இருந்தபோதும் கட்சித் தலைவர்கள் இல்லாதவர்களை அழைத்துள்ளார்.



2005ஆம் ஆண்டு ரணிலுக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால் சமஷ்டி வந்திருக்கும். அன்று இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தலைமைகள், சமஷ்டி வேண்டாம் என பிரசாரம் செய்தார்கள். ஆகவே, ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது முதலில் தமிழர்களின் காணி அபகரிப்பு, இந்து ஆலையங்கள் உடைப்பை நிறுத்தினால் மாத்திரமே நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருவோமென சொல்வதற்கான தைரியம் அவர்களுக்கு இல்லை.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது மௌனிகளாக இருந்து தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு, இன்று அரசாங்கத்துடன் வெட்கமில்லாமல் சமஷ்டியை பற்றி பேசப்போகின்றனர் என்பது வேடிக்கையானது. இப்படியான சூழ்நிலையில் இனி சமஷ்டி கிடைக்குமா? மக்களை ஏமாற்றினால் போதும் எனது அரசியல் செய்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு தமிழ்த் தலைமைகள் துரோகம் செய்ததென்றால் இந்த நாட்டில் ஏன் ஒரு அரசாங்கம்? நாங்கள் அடிமைகளாக இருந்துவிட்டு போகலாம்.

இந்தத் தலைவர்களின் ஊழலை பற்றி அம்பலப்படுத்தாது விடுவதால் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கின்றனர். சம்பந்தன் நாடாளுமன்றத்தின் படி கூட ஏறத் தகுதியில்லாதவர்.

இவர்கள், பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் செய்ய 3 வெளிநாடுகளை கூப்பிட வேண்டும் என அறிக்கை விட்ட அடிமுட்டாள்கள். எங்கள் மக்களை ஏமாற்றாதீர்கள்.

எந்த நாடும் இதைச் செய் என சொல்லமுடியாதென்பது சட்டத்தரணிகளான உங்களுக்குத் தெரியாதா? ஏன் மக்களை ஏமாற்றுகிறீர்கள்? இந்தியாவிலிருந்து கப்பலில் பொருட்கள் வந்ததும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று அங்கு அருகில் நிற்கின்றனர். சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட தமிழ்த் தலைமைகள் தமது வரலாற்றை பின்னோக்கிப் பார்க்கவேண்டும் அப்போதுதான் தாங்கள் சொந்த மக்களை ஏமாற்றி, அவர்களுக்கு எவ்வளவு துரோகம் செய்துள்ளார்கள் என்பது தெரியும். இல்லை என ஒருவர் சொல்லட்டும். நான் பகிரங்கமாக மேடைக்கு வரத் தயார் - என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்குக!

### திருகோணமலையில் போராட்டம்



(அப்துல்சலாம் யாசீம்)

அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்தல், பயங்கரவாதச் தடைச்சட்டதை நீக்குதல், இராணுவ மயமாக்கலை நிறுத்துதல், திட்டமிட்ட காணி அபகரிப்புகளை நிறுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து திருகோணமலையில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சுற்றுவட்டத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மக்கள் போராட்டத்துக்கான ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், குறித்த போராட்டமானது திருகோணமலையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நேற்று (18) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலுமுள்ள பாடசாலைகளில் இடம்பெற்றது. வாழைச்சேனை பிரதேசத்திலும் அதிகளவான மாணவர்கள் ஆர்வத்துடன் பரீட்சைக்குத் தோற்றியதை அவதானிக்க முடிந்தது.
(படங்கள் - கல்லடி, மீராவோடை நிருபர்கள்)

## மாணவியை துஷ்பிரயோகம் செய்த இருவர் மட்டக்களப்பில் கைது!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பில் பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவிக்கு போதைப் பொருளை வழங்கி, துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாணவியின் காதலன் என குறிப்பிடும் ஒருவரும், அவரின் நண்பருமே சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

# 17 மேலதிக வாக்குகளினால் கல்முனை மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்




(சாய்ந்தமருது நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 17 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டத்திற்கான விசேட சபை அமர்வு கடந்தவாரம் (15) மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அமர்வுக்கு மாநகர சபையின் மொத்த உறுப்பினர்கள் 41 பேரில் 35 பேர் சமுகமளித்திருந்தனர்.

பட்ஜெட்டை சமர்ப்பித்து மாநகர முதல்வர் உரையாற்றியதைத் தொடர்ந்து உறுப்பினர்களின் கருத்துகளையடுத்து பட்ஜெட் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, 26 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 09 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 06 உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 12 உறுப்பினர்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 05 உறுப்பினர்கள், சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 04 உறுப்பினர்கள், தேசிய காங்கிரஸின் ஒரு உறுப்பினர், ஹெலிகொப்டர் சுயேட்சைக் குழுவின் ஒரு உறுப்பினர் மற்றும் மான் சுயேட்சைக்குழுவின் ஒரு உறுப்பினருமாக 26 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 03 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 03 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 04 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 02 உறுப்பினர்களும் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் பலரும் மாநகர முதல்வருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# காணமலாக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட மூன்று பிரச்சினைகளுக்கு பெப்ரவரிக்கு முன்னர் தீர்வு

## தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக சுமந்திரன் எம்.பி. தகவல்




(மட்டக்களப்பு நிருபர்)

காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், எஞ்சியிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் ஒரேநேரத்தில் தீர்வு காண முதலாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக் கழகம் உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம் எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் (17) பெரியகல்லாறு இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்தோம். இதனை வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு பலரும் உதவுவதற்கு முன்வந்துள்ளார்கள். போதைப்பொருள் விநியோகத்தை எங்களால் கட்டுப்படுத்த முடியாதிருந்தாலும், அதிலிருந்து எமது இளைஞர், யுவதிகளை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கான அதியுச்ச அதிகாரப்பகிர்வு, உள்ளக சுய நிர்ணய அடிப்படையில் ஒரு சமஷ்டிக் கட்டமைப்பில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதை ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியபோது தெட்டத்தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம்.

இதனைக் கேட்டு தெரிந்துகொள்கின்றவர்களுக்கு புரியும். தூங்குவதுபோல் பாசாங்கு செய்பவர்களை தட்டி எழுப்ப முடியாது. எனவே, இந்த விடயங்களை வெளிப்படையாக பகிரங்கப்படுத்தியதன் பின்னரே ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு சென்றோம்.

இவ்விடயங்களே எமது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் தொடர்ச்சியாக குறிப்பிடப்பட்டு வருகின்றன. இப்பேச்சுவார்த்தையில் காணாமலாக்கப்பட்டவர்களின் விடயம், எஞ்சியிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், அதிகாரப்பகிர்வு தொடர்பில் அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்கள் அமுல்படுத்தப்பட்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படல் வேண்டும்.

புதிய அரசியலமைப்பு விடயத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட அடிப்படையில் ஒரு நிரந்தத் தீர்வு காணப்படல் வேண்டும்.

இவை ஒரேநேரத்தில் நடைபெற வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும். முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியும் மற்றவர்களும் இதனை ஏற்றுக்கொண்டும் இருகின்றார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்து 75ஆவது ஆண்டு நிறைவை அடுத்த வருடம் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் இந்த விடயங்களை செய்து முடிக்கவேண்டும் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். அதனை நாங்கள் முற்றுமுழுதாக ஏற்றிருக்கின்றோம். அந்தக் காலகட்டத்திற்குள்ளேயே ஓர் இணக்கப்பாடு, ஒரு முடிவு ஏற்பட வேண்டும் என்பதை நாங்கள் நிர்ப்பந்தமாக சொல்லியிருக்கின்றோம் - என்றார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன். விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், இரத்த நன்கொடையாளர்கள், மட்டக்களப்பு இரத்த வங்கிப் பிரிவு உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆலையடிவேம்பில் டெங்கு தாக்கம் அதிகரிப்பு

## சிரமதானங்களை மேற்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை



ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பிரிவுகளில் டெங்கின் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில், இதுவரையில் 137 பேர் டெங்கு நோய்க்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.அகிலனின் உத்தரவுக் கமைய பரிசோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைவாக நேற்று முன்தினம் அக்கரைப்பற்று கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பகுதிகள் அனைத்தும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இடம்பெற்றதுடன் குடியிருப்புகள் அனைத்தும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் என்.ரதீசன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இப்பணியில் ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சசிந்திரன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மோகனதாஸ் உள்ளிட்ட இராணுவத்தினர், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

குடியிருப்புகள், பாடசாலை கட்டடங்கள், பொது இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் 02 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டது.

48 மணித்தியாலங்களுக்குள் துப்புரவு செய்ய வேண்டும் எனவும் உத்தரவு இடப்பட்டதுடன், டெங்கு பரவும் அபாய இடங்களாக சில குடியிருப்புகள் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறப்பட்;டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



13 பற்றி பேசுவது நகைப்புக்குரியது எண்டு மகிந்தட சின்ன புத்தா நாமல் சொல்லியிருக்காரு எலுவா..?

ஓண்டா தம்பி இதத்தான் பல தமிழ் ஆக்களும் சொல்லுறாங்க... சமஷ்டிய பற்றி பேசினா அதுவும் மாட்டன் என்கிறாங்க அப்ப எதப்பற்றி பேச... உட்டுப்போட்டு எக்கராச்சியத்த பற்றி பேசி சிங்ககொடிய சம்மந்தர கொண்டு சுதந்திர தினத்தில ஏற்ற வேண்டியதுதான் சரியா தம்பி நாமல்?

# புகையிரத விபத்தில் நபரொருவர் பலி!




(ஏறாவூர் நிருபர்)



மட்டக்களப்பு, சித்தாண்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற புகையிரத விபத்தில் 32 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதத்தில் சிக்கி இவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் மதுபோதையுடன் தண்டவாளத்தில் அமர்ந்திருந்தபோதே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார்

மட்டக்களப்பு, மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பாலச்சந்திரன் சுஜீவகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். இவரது சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், திடீர் மரண விசாரணையதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் ஏறாவூர் பொலிஸார் சகிதம் அங்கு சென்று முதற்கட்ட விசாரணைகளை நடத்தினார். அதையடுத்து சடலம் உடற்கூறு பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. ஏறாவூர் பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு


(மூதூர் நிருபர்)

மூதூர் அனர்த்த சமூக சேவைகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மூதூர் வலயக்கல்வி அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் 2021ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மூதூர் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

அவ்வமைப்பின் தலைவரும், திடீர் மரண விசாரணை அதிகாரியும், முஸ்லிம் விவாகப் பதிவாளருமான அல்ஹாஜ் எம்.வை.எம்.லாபீரின் தலைமையில இந்நிகழ்வு இடம்பெற்றது.


இதன்போது மூதூர் கல்வி வலயத்திற்குட்பட்ட சுமார் 15 பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 94 தமிழ், முஸ்லிம் மாணவர்ளுக்கு மகத்தான வரவேற்பு மற்றும் கௌரவிப்பு அளிக்கப்பட்டு நொக்ஸ் சந்தியிலிருந்து பேர்ல் கிராண்ட் மண்டபம் வரை வரவேற்களிக்கப்பட்டதோடு, சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் வெற்றிக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அறூஸ், பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எ.ஹரீஸ், பீ.டி.ஆப்தீன், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி மற்றும் சிறப்பு அதிதிகளாக மூதூர் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் அஷ்ஷெய் எஸ்.எச்.தஸ்ரிக், மூதூர் பிரதேச SLPP அமைப்பாளர் ஆ.முபாரக், மூதூர் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.ஏ.முஹீர், பிரதி அதிபர் எம்.எஸ்.வதூத், MMJ ஸ்டோர்ஸ் உரிமையாளர் எம்.ஜெளஸ் மற்றும் சமூக செயற்பாட்டாளர் என்.பி.நாஜின் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பீ.எம்.நஸீர் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி




(கே எ ஹமீட்)

போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியும் அறபா வித்தியாலய மாணவர்களுக்கான கருத்தரங்கும் நேற்று முன்தினம் (17) அட்டாளைச்சேனையில் இடம்பெற்றன.

'நாம் ஊடகர் பேரவை'யின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு அட்டாளைச் சேனை ஜும்ஆ பெரியபள்ளிவாசல் மற்றும் வைஎம்எம்ஏ அமைப்பின் அட்டாளைச்சேனை கிளையினர் அனுசரணை வழங்கினர்.

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான போதைப்பொருளுக்கு எதிரான நடைபவனி, சந்தைச் சதுக்கத்தைச் சென்றடைந்து, மீண்டும் அறபா வித்தியாலயத்தை வந்தடைந்தது.

அதனையடுத்து அறபா வித்தியாலயத்தில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம்.றஸாட் வளவாளராக பங்கேற்றார்.

'நாம் ஊடகர் பேரவை'யின் தலைவர் யூ.எல்.மப்றூக் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

மேலும், வைஎம்எம்ஏ அமைப்பின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ், அகில இலங்கை வைஎம்எம்ஏ பேரவையின் உப தலைவர் எஸ்.தஸ்தகீர், செயற்றிட்ட தவிசாளர் கே.எல். சுபையிர், அந்த அமைப்பின் அட்டாளைச்சேனை கிளையின் தலைவர் எம்.ஐ.ஹாசிம், செயலாளர் ஏ.எல்.கியாஸ்தீன், அறபா வித்தியாலய அதிபர் எம்.ஏ.அன்சார், நாம் ஊடகர் பேரவையின் செயலளர் ஏ.சி.றிசாட், பொருளாளர் ஏ.புஹாது, உப தலைவர் ஏ.பி.அப்துல் கபூர், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.ஏ.வாஹிட், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு மூன்றாமிடம்



(கிண்ணியா நிருபர்)

அரச திணைக்களங்களுக்கிடையேயான 2020ஆம் ஆண்டுக்காக நடைபெற்ற தேசிய உற்பத்தித்திறன் போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வில், தேசிய மட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு மூன்றாமிடம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தநிகழ்வு கடந்த வாரம் கொழும்பிலுள்ள அலரிமாளிகையில் நடைபெற்றதுடன், பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்துகொண்டார்.

இதன்போது அமைச்சர் மனுஷ நாணயக்கார மிடருந்து தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி விருதைப் பெற்றுக்கொண்டார்.

இவ்விருது கிடைக்கப் பெறுவதற்கு உழைத்த பிரதேச செயலக சக உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச செயலாளர் நன்றி தெரிவித்தார்.

இதில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீபும் கலந்துகொண்டார்.

# FIFA WORLD CUP - 2022

# மொரோக்கோவை வீழ்த்தி மூன்றாமிடத்தை கைப்பற்றிய குரேஷியா



## 11ஆவது முறையாக மூன்றாமிடத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஐரோப்பிய அணிகள்

## பதக்கத்துடன் விடைபெறும் வாய்ப்பைப் பெற்றார் மோட்ரிச்

## அரையிறுதிக்குள் நுழைந்த முதல் ஆபிரிக்க அணி என்ற சரித்திரத்துடன் விடைபெற்ற மொரோக்கோ

## வெறும் 4 மில்லியன் மக்களுடன் ஆறாவது உலகக்கிண்ணத்தில் மூன்றாவது பதக்கம் வென்ற குரேஷியா



**(ஏ. அகீல் சிஹாப்)**

22 ஆவது பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடரின் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் ஆபிரிக்க அணியான மொரோக்கோவை வீழ்த்தி, கடந்த உலகக்கிண்ணத் தொடரில் ரன்னர்ஸ்-அப்பாக தெரிவான குரேஷியா மூன்றாமிடத்தை தக்கவைத்தது.

கட்டாரின் கலீபா சர்வதேச ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் முதல் அரையிறுதியில் ஆர்ஜென்ரீனாவிடம் வீழ்ந்த குரேஷியா - இரண்டாவது அரையிறுதியில் பிரான்ஸிடம் வீழ்ந்த மொரோக்கோ அணிகள் மோதின. ஆட்டம் தொடங்கிய 7ஆவது நிமிடத்தில் குரோஷியா வீரர் ஜோஸ்கோ குவார்டியோல் தமது அணிக்கான முதல் கோலை பதிவு செய்தார். இதனையடுத்து 9ஆவது நிமிடத்தில் மொரோக்கோ வீரர் அக்ரஃப் தாரி பதில் கோல் அடித்ததால் ஆட்டம் சமநிலை பெற்றது.

இதையடுத்து 42ஆவது நிமிடத்தில் குரேஷியா வீரர் மிஸ்லாவ் ஓர்சிக் தமது அணிக்கான 2ஆவது கோலை அடித்தார். இதனால் முதல் பாதி ஆட்ட முடிவில் குரேஷியா 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியில் குரேஷியா தடுப்பாட்டத்தில் தீவிரம் காட்ட மொரோக்கோ அணி கோல் எதுவும் அடிக்கவில்லை. கோல் அடிக்கக்கூடிய பல சந்தர்ப்பங்களை மொரோக்கோ வீரர்கள் தவறிவிட்டனர். இதனால் 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்ற குரோஷியா இந்த உலகக்கிண்ணத் தொடரில் 3ஆவது இடத்தைப் பிடித்தது.

கடந்த 1998ஆம் ஆண்டு மூன்றாவது இடத்தைப் பிடித்த குரேஷிய அணி, இறுதியாக நடைபெற்ற 2018 பீபா உலகக்கிண்ணத் தொடரில் இரண்டாவது இடம் பிடித்தது. தற்போது, இரண்டாவது முறையாக இந்த முறை வெண்கலப் பதக்கத்தை முத்தமிட்டது. இதேவேளை, 1982இற்குப் பின் தொடர்ந்து 11ஆவது முறையாக பீபா உலகக்கிண்ணத் தொடரில் ஐரோப்பிய அணிகளே மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வெறும் 4 மில்லியன் மக்கள் தொகையைக்கொண்ட சிறிய நாடான குரேஷியா, 6 தடவைகள் மாத்திரம் பீபா உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்று அதில் மூன்று முறை பதக்கம் வென்றுள்ளமை நம்பமுடியாத சாதனையாகவே பார்க்கப்படுகிறது. உதைபந்து உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான குரேஷிய அணியின் தலைவர் லூகா மொட்ரிச் தனது இறுதி உலகக்கிண்ணத்தில் ஆடிய நிலையில் அவர் பதக்கத்துடனே விடைபெறும் வாய்ப்பைப் பெற்றார்.

மறுமுனையில் எதிர்பாராத அணியாக, பெல்ஜியம், ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற பல முன்னணி அணிகளை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்த முதல் ஆபிரிக்க அணி சரித்திரத்துடன் மொரோக்கோ அணி விடைபெற்றது. இது அந்த அணிக்கு மிகப்பெரிய சாதனையாகவே அமைகிறது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# பங்களாதேஷை வீழ்த்தி இலங்கையை பின்தள்ளிய இந்திய அணி

சுற்றுலா இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி 188 ஓட்டங்களினால் வெற்றிபெற்று ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணியை பின்தள்ளி மூன்றாமிடத்திற்கு முன்னேறியது.

முதல் டெஸ்ட் போட்டி சாட்டிங்காம் மைதானத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 404 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி தொடர்ந்து இந்திய அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டை பறிகொடுத்தது. அந்த அணி, 55.5 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனையடுத்து இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி 258 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. கில் மற்றும் புஜாரா சதமடித்து



அசத்தினர். இதனால் பங்களாதேஷ் அணிக்கு 513 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸில் விளையாடிய பங்களாதேஷ் அணி 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 272 ஓட்டங்கள் எடுத்தது.

பங்களாதேஷ் அணியின் வெற்றிக்காக இறுதி நாளில் 241 ஓட்டங்கள் தேவைப்பட்டது. நேற்று ஆட்டம் தொடங்கிய ஒரு மணி நேரத்தில் இந்திய அணி எஞ்சிய 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தி வெற்றியை பதிவு செய்தது. இதன்மூலம் இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. இந்த வெற்றியின் மூலம் இந்திய டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் 55.77 வெற்றி வீதத்துடன் மூன்றாமிடத்திற்கு முன்னேறியது. இலங்கை அணி 53.33 வெற்றி வீதத்துடன் நான்காமிடத்தில் காணப்படுகிறது.

# 9ஆவது ப்ரோ கபடி லீக்



## இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்ற ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ்

உலகின் பிரபல கபடி லீக் தொடர்களில் ஒன்றான ப்ரோ கபடி லீக் தொடரின் 9ஆவது சீசனுக்கான சம்பியனாக ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணி இரண்டாவது முறை மகுடம் சூடியது. இறுதிப்போட்டியில் ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணி, புனேரி போல்டன் அணியை 33- 29 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது.

2022 ப்ரோ கபடி லீக் தொடரில் நேற்று முன்தினம் இரவு மும்பையில் நடந்த இறுதிப் போட்டியில் சுனில் குமார் தலைமையிலான ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணி, பசெல் அட்ராசலி தலைமையிலான புனேரி போல்டனை எதிர்கொண்டது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகள் எடுத்தன. இருப்பினும், கடைசி நேரத்தில் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய ஜெய்ப்பூர் அணி இறுதியில் 33- 29 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றது.

முதல் சீசனில் சம்பியன் பட்டம் வென்ற ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் 8 வருடங்கள் கழிந்து மீண்டும் இரண்டாவது தடவையாக சம்பியனானது. முதல் முறையாக இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்ற புனேரி போல்டன் சம்பியனாகும் வாய்ப்பை இழந்தது.

## இன்றைய போட்டிகள்

SKYEXCH Presents MAZAPLAY LPL T20 LANKA PREMIER LEAGUE 2022

ஜப்னா கிங்ஸ் VS கொழும்பு ஸ்டார்ஸ்
மாலை 3.00 மணி

கோல் க்ளாடியேட்டர்ஸ் VS தம்புள்ள அவுறா
இரவு 7.30 மணி

# 32 அணிகளுடன் கிளப் உலகக்கிண்ணம் 2025இல் அறிமுகம்

2025ஆம் ஆண்டு 32 அணிகள் கொண்ட கிளப் உலகக்கிண்ணம் அறிமுகப்படுத்தவுள்ளதாக பீபா தலைவர் கியானி இன்ஃபான்டினோ அறிவித்துள்ளார். தற்போது ஏழு அணிகள் மட்டுமே கிளப் உலகக்கிண்ணத்தில் பங்கேற்கின்றன. மேலும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை போட்டிகள் நடத்தப்படும் என்று கியானி இன்ஃபான்டினோ கூறினார். மேலும், இது உலக விளையாட்டு அமைப்புக்கு வருவாயை அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது, கான்டினென்டல் போட்டிகளிலிருந்து முன்னணி அணிகள் மற்றும் ஹோஸ்ட்களின் தேசிய சம்பியன் ஆகியவை கிளப் உலகக்கிண்ண பட்டத்திற்காக போட்டியிடுகின்றன.

ஆனால், ஆண்கள் தேசிய அணிகளுக்கான சர்வதேச கிளப் போட்டியான பீபா கான்ஃபெடரேஷன் கிண்ணத்தின் இடத்தில் கிளப் உலகக்கிண்ணத்தை நடத்த இன்ஃபான்டினோ திட்டமிட்டுள்ளார். 2022-2026 நான்கு ஆண்டு காலப்பகுதியில் 11 பில்லியன் டொலர் வருவாயை பீபா எதிர்பார்க்கிறது.

# 14ஆவது இலங்கை ஜூனியர் ஓபன் கோல்ஃப் மற்றும் பிராந்திய ஜூனியர் ஓபன்களுக்கு அனுசரணை வழங்கும் Prima Sunrise Bread




14ஆவது இலங்கை ஜூனியர் ஓபன் கோல்ஃப் சம்பியன்ஷிப் போட்டிகள் டிசம்பர் 20 முதல் 22 வரை கொழும்பு ரோயல் கோல்ஃப் கிளப்பில் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான மற்றும் பிராந்திய ஜூனியர் ஓபன்ஸ் போட்டிகளுக்கு Prima Sunrise Bread அனுசரணை வழங்க உறுதியளித்துள்ளது.

இலங்கை ஜூனியர் ஓபன், ஜூனியர் கோல்ப் வீரர்களுக்கான உலக அமெச்சூர் கோல்ஃப் தரவரிசையில் (WAGR) நிறுவப்பட்ட அளவுகோலாகும். இலங்கை ஜூனியர் ஓபன் போட்டியில் வெற்றி பெறும் வீர, வீராங்கனைகள் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் தேசிய ஜூனியர் சம்பியனாக மகுடம் சூட்டப்படுவர். இப்போட்டியில் 9 வயது முதல் 18 வயது வரையிலான வயது பிரிவுகள் அடங்கும். இந்த ஜூனியர் விருதுகளுக்காக சுமார் 80 முதல் 100 குழந்தைகள் போட்டியிடுகின்றனர்.

வெளிமாநிலங்களிலிருந்து திறமைகளை வளர்ப்பதற்காக பிராந்திய ஜூனியர் ஓபன்கள் ஹம்பாந்தோட்டை, கண்டி, நுவரெலியா மற்றும் திருகோணமலை போன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும்.

இந்தப் போட்டியில் நடப்பு சம்பியனான யன்னிக் குமார மற்றும் கயா தலுவத்த ஆகியோர் முறையே ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் போட்டியிடவுள்ளனர். பரிசளிப்பு விழா டிசம்பர் 22ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.



# மெஸ்ஸியை எதிர்த்து அணிவகுத்தவர்கள்

**2007இல் மெஸ்ஸி காக்காவுக்குப் பின் 2ஆவது இடத்தைப் பிடித்தார்.**

**2008-2018 வரை மெஸ்ஸி VS ரொனால்டோ.**

**2019இல் அது மெஸ்ஸி VS விர்ஜில் வான் ஜோக்.**

**2021இல் அது மெஸ்ஸி VS லெவன்டோவ்ஸ்கி.**

**2022இல் மெஸ்ஸி VS எம்பாப்பே.**

# இந்தியாவில் மலையக வீரருக்கு 4 தங்கப் பதக்கங்கள்

**(ஆ. ரமேஸ்)**





இந்தியா கர்நாடக மாநிலம் உடுப்பி மகாத்மா காந்தி சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்ற மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் இலங்கை மலையக வீரரான உடப்புஸலாவை எமஸ்ட் தோட்ட தேசிய, சர்வதேச ஓட்ட வீரர் மணிவேல் சத்தியசீலன் நான்கு தங்கப்பதக்கங்களையும் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று இலங்கைக்கும், மலையகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

உடுப்பியில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த மெய்வல்லுனர் போட்டியில் இலங்கையின் ஓட்ட வீரர்கள் 48 பேருடன், இந்தியாவில் 12 மாநிலங்களைச் சேர்ந்த ஓட்ட வீரர்களுடன், 5 நாடுகளைச் சேர்ந்த 500இற்கும் மேற்பட்ட ஓட்ட வீரர்கள் கலந்துகொண்டனர். இலங்கையிலிருந்து இந்தப் போட்டியில் மலையக ஓட்ட வீரராக மணிவேல் சத்தியசீலன் கலந்துகொண்டதுடன், இவர் உடப்புஸலாவை 'ஏபர்நெட்' ஆடைத் தொழிற்சாலை மற்றும் வலப்பனை பிரதேச சபை வழங்கிய அனுசரணையில் இந்தியா உடுப்பி மற்றும் கோவா ஆகிய இரு இடங்களில் இடம்பெற்ற மெய்வல்லுனர் போட்டிக்கு கடந்த 9ஆம் திகதி இந்தியாவுக்கு சென்றிருந்தார்.

இதில் கர்நாடக மாநிலம் உடுப்பியில் கடந்த வாரம் இடம்பெற்ற போட்டியில் 5000 மீற்றர் வேகநடை, 5 கிலோ மீற்றர் ஓட்டப் போட்டி, 1 500 மீற்றர் ஓட்டப் போட்டி, 4×400 மீற்றர் ரிலே ஓட்டப் போட்டி ஆகியவற்றில் நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்ற சத்தியசீலன் 4×100 மீற்றர் ரிலே ஓட்டப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் ஒன்றுமாக ஐந்து பதக்கங்களைப் பெற்றார். மேலும் ஜனவரி மாதம் 2023 கோவாவில் இடம்பெறவுள்ள மெய்வல்லுனர் போட்டிகளிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7